# 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம்.

## (தமிழ்நாடு சட்ட எண் 35/2019)

(2023, அக்டோபர் 31 அன்று இருந்தவாறு)

# The Tamil Nadu Private Schools (Regulation) Act, 2018

## (Tamil Nadu Act No 35 of 2019)

(as on 31st October, 2023)

தமிழாக்கம்:
தமிழ்நாடு மாநிலச் சட்ட ஆட்சிமொழி ஆணையம்
சென்னை

தமிழ்நாடு அரசுக்காகத் தமிழ்நாடு அரசு எழுதுபொருள் அச்சுத்துறை ஆணையரால் அச்சிடப்பட்டு வெளியிடப்பட்டது.

2023

# 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம்

## (தமிழ்நாடு சட்ட எண் 35/2019)

பிரிவு பொருளடக்கம்


**அத்தியாயம்–I**

**முன்னுரை.**

1. குறுந்தலைப்பு, பரப்பெல்லை, பொருந்துதல் மற்றும் தொடக்கம்.
2. பொருள்வரையறைகள்.

**அத்தியாயம் –II**

**தனியார் பள்ளிகளை நிறுவுவதற்கான அனுமதி, பதிவு மற்றும் அங்கீகாரம்.**

3. பள்ளிக் கல்வியை ஒழுங்குபடுத்துவதற்கான அதிகாரம்.
4. தனியார் பள்ளி அனுமதி பெற வேண்டும்.
5. அனுமதிக்கான விண்ணப்பம்.
6. அனுமதி வழங்குதல்.
7. அங்கீகாரச் சான்றுக்கான விண்ணப்பம்.
8. அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல்.
9. இணைப்பு.
10. தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பால் அங்கீகாரம் திரும்பப் பெறப்படுதல்.
11. அங்கீகாரம் திரும்பப் பெறப்படுவதன் விளைவு.

**அத்தியாயம் III**

**கல்வி முகவாண்மை மற்றும் பள்ளிக்குழு.**

12. கல்வி முகவாண்மை.
13. கல்வி முகவாண்மை அமைப்பில் மாற்றம் அல்லது கல்வி முகவாண்மையை மாற்றுதல்.

14. பள்ளிக் குழுவின் அமைப்பு.
15. கல்வி முகவாண்மையின் பொறுப்பு.

## அத்தியாயம் IV

## சிறுபான்மையினர் தனியார் பள்ளிகளுக்கான சிறப்பு வகைமுறைகள்.

16. சிறுபான்மையினர் தனியார் பள்ளி ஒன்றை நிறுவுவதற்கான உரிமை.
17. கல்வி முகவாண்மை மாற்றப்படுவதன் பேரில் பள்ளி ஒன்றின் சிறுபான்மை தகுதி நிலை.
18. சிறுபான்மையினர் பள்ளி ஒன்றிற்கான சிறப்பு அலுவலரின் பணியமர்த்தம்.
19. சிறுபான்மையினர் பள்ளிகளுக்கான விலக்கு.

## அத்தியாயம் V

## தனியார் பள்ளிகளுக்கான கட்டுப்பாடு.

20. மாணவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு.
21. தரமான கல்வியை உறுதி செய்தல்.
22. தேர்வுகளை நடத்துதல் மற்றும் விடைத் தாள்களை மதிப்பீடு செய்தல்.
23. சேர்க்கைக் காலத்தில் தனியார் பள்ளிகள் வெளியிட வேண்டிய விவரங்கள்.
24. பெற்றோர் ஆசிரியர் சங்கம்.
25. அதிகாரம் பெற்ற நபர் அல்லது அதிகார அமைப்பிற்கு தகவல் அளித்தல் மற்றும் பணியாளருக்கு மாற்றுப்பணி அளித்தல்.
26. கட்டணங்கள்.
27. தனியார் பள்ளிகளின் நிதிகள் மற்றும் சொத்துக்களைப் பயன்படுத்துதல்.
28. ஆய்வு மற்றும் விசாரணை.
29. தனியார் பள்ளி, அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு முடிவுக்கு வருதல்.
30. தனியார் பள்ளியின் சொத்தை உரிமை மாற்றம் செய்வதற்குத் தடை.

## அத்தியாயம் VI
## குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் தனி அலுவலர்களின் பணியமர்த்தம்.

31. குறிப்பிட்ட சில சூழ்நிலைகளில் தனி அலுவலரின் பணியமர்த்தம்.

## அத்தியாயம் VII
## பணியாளரின் பணியமர்த்தம் மற்றும் பணி நிபந்தனைகள்.

32. பள்ளிகளில் பணியாளரின் பணியமர்த்தம் மற்றும் பணி நிபந்தனைகள்.
33. தனியார் பள்ளிகளில் பணியாளரின் பணியமர்த்தத்திற்கான குறைந்தபட்ச தகுதிகள்.
34. தனியார் பள்ளியின் பணியாளர்கள் நடத்தை விதித் தொகுப்பினால் நிருவகிக்கப்படுவர்.
35. அரசு உதவிபெறும் தனியார் பள்ளி பணியாளரின் வரையறைகள் மற்றும் பணிநிபந்தனைகள்.

## அத்தியாயம் VIII
## அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு மானியம் வழங்குதல்.

36. மானியம் வழங்குதல்.
37. புதிய தனியார் பள்ளிகள், வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்றுவிக்கும் மொழிக்கு மானியம் வழங்குவதற்குத் தடை.
38. அரசு உதவிபெறும் தனியார் பள்ளிகளில் ஆட்குறைப்பின் பேரில் பணியாளரை உட்சேர்த்துக் கொள்ளுதல்.
39. தகவல் அளிக்காதிருத்தல் அல்லது தவறான தகவலை அளித்தலுக்கான தண்டனை.
40. இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதையும் மீறுவதற்கான தண்டனை.

## அத்தியாயம் IX
## மேல்முறையீடு மற்றும் சீராய்வு.

41. அதிகாரஅமைப்பின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு.
42. மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பின் அதிகாரங்கள் மற்றும் மேல்முறையீட்டினை தீர்வு செய்தல்.
43. சீராய்வு.

## அத்தியாயம் X
## கணக்குகள் மற்றும் தணிக்கை.

44. கணக்குகளின் வருடாந்திர தணிக்கை.
45. விவரஅறிக்கைகள் முதலியவற்றை அளித்தல்.

## அத்தியாயம் XI
## பல்வகை.

46. அரசுக்குச் சேரவேண்டிய தொகையை நில வருவாய் நிலுவையைப் போன்று வசூலித்தல்.
47. பணிப்புரைகள் வழங்குவதற்கான அரசின் அதிகாரங்கள்.
48. அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்.
49. தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் செயற்பணிகளை அரசின் சார்நிலை அலுவலர் அல்லது அதிகாரஅமைப்பு புரிவர்.
50. தகுதிவாய்ந்த அலுவலர் அரசுப் பணியாளர்களாக இருப்பர்.
51. குற்றங்களை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல்.
52. உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குத் தடை.
53. பிற சட்டங்களின் செயல்பாடு.

54. நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு.

55. இந்தச் சட்டத்தின்படி வழங்கப்படும் ஆணைகள் முதலியவற்றின் இறுதி நிலை.

56. கல்வி முகவாண்மை முதலியவை குறித்த பூசல்களுக்கான தீர்வு.

57. விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்.

58. விலக்கு.

59. நீக்கம் மற்றும் காப்புரை.

60. இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்.

# 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம்.

## (தமிழ்நாடு சட்ட எண் 35/2019)

[தமிழ்நாடு சட்டமன்றப் பேரவையின் பின்வரும் சட்டமானது, 2019ஆம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 7ஆம் நாளன்று ஆளுநரின் ஏற்பிசைவைப் பெற்று பொதுத்தகவலுக்காகத் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்டது.]

இந்தியக் குடியரசின் அறுபத்து ஒன்பதாம் ஆண்டில் தமிழ்நாடு மாநில சட்டமன்றப் பேரவையினால் இயற்றப்பட்ட சட்டம் பின்வருமாறு.

## அத்தியாயம்–I

## முன்னுரை.

1. **குறுந்தலைப்பு, பரப்பெல்லை, பொருந்துதல் மற்றும் தொடக்கம்**.– (1) இந்தச் சட்டம் 2018ஆம் ஆண்டு தமிழ்நாடு தனியார் பள்ளிகள் (ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டம் என வழங்கப்படும்.

(2) இது தமிழ்நாடு மாநிலம் முழுவதும் பரவி இருக்கும்.

(3) இது தமிழ்நாடு மாநிலத்தில் அரசு நிதி உதவி பெறும் அல்லது அரசு நிதி உதவி பெறாத அனைத்துத் தனியார் பள்ளிகளுக்கும் பொருந்தும்.

(4) இது, அரசு அறிவிக்கையின் வாயிலாக குறிப்பிடும் தேதியன்று நடைமுறைக்கு வரும்.

2. **பொருள் வரையறைகள்**.– இந்தச் சட்டத்தில் தறுவாய் வேறுபொருள் குறித்தாலன்றி,–

(a) "கல்வி ஆண்டு" என்பது ஜூன் மாதம் முதல் நாள் தொடங்கி அடுத்த ஆண்டின் மே மாதம் 31ஆம் நாள் வரையிலான காலஅளவு அல்லது அந்தந்த கல்வி வாரியங்களால் குறிப்பிடப்படப்படும் பிற காலஅளவு எனப் பொருள்படும்;

(b) "இணைக்கப்பட்டது" என்பது ஒப்புதல் அளிக்கப்பட்ட படிப்புப் பிரிவுகளைப் பின்பற்றும் நோக்கத்திற்காகவும், தேர்வுக்காக ஒப்புதல் அளிக்கப்பட்ட பாடப்பிரிவுகளுக்கு இணங்க மாணவர்களைத் தயார்செய்வதற்காகவும் குறிப்பிட்ட தேர்வு வாரியம் ஒன்றில் செய்யப்படும் முறைப்படியான பதிவு எனப் பொருள்படும்.

(c) "நிதி உதவி பெறும் பள்ளி" என்பது அதன் செலவுகளுக்காக மாநில நிதியிலிருந்து மானியமாக நிதி உதவிப் பெறக்கூடிய பள்ளி ஒன்று எனப் பொருள்படும்;

(d) "மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு" என்பது இந்தச் சட்டத்தின்படி மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பின் செயற்பணிகளைச் செய்து முடிப்பதற்கு அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் அல்லது அதிகராமளிக்கப்பட்ட நபர் எவரும் எனப் பொருள்படும்;

(e) "நன்னடத்தை விதி"; என்பது அரசால் வகுக்கப்பட்ட நன்னடத்தை விதி எனப் பொருள்படும்;

(f) "தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு" என்பது வகுக்கப்படும் தனியார் பள்ளிகளின் அத்தகைய பிரிவுகள் தொடர்பாக அல்லது அத்தகைய நோக்கத்திற்காக அல்லது அத்தகைய பரப்பிடத்திற்காக இந்தச் சட்டத்தின்படி தகுதிவாய்ந்த அதிகார அமைப்பின் செயற்பணிகளை மற்றும் கடமைகளைச் செய்து முடிப்பதற்கு அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரஅமைப்பு, அலுவலர் அல்லது நபர் எவரும் எனப் பொருள்படும்;

(g) "இயக்குநர்" என்பது,–

(i) ஆங்கிலோ – இந்தியன் பள்ளிகள் உள்ளிட்ட நிதி உதவி பெறும் மற்றும் பகுதி நிதி உதவி பெறும் அனைத்து உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகள் தொடர்பான பள்ளிக் கல்வி இயக்குநர் எனப் பொருள்படும்;

(ii) நிதி உதவி பெறும் மற்றும் பகுதி நிதி உதவி பெறும் அனைத்து ஆரம்பப் பள்ளிகள் மற்றும் நடுநிலைப் பள்ளிகள் தொடர்பாக தொடக்கக் கல்வி இயக்குநர்;

(iii) மாநில இளநிலைப் பள்ளி கல்வி வாரியம், மத்திய கல்வி வாரியம், இந்திய இடைநிலைப் பள்ளி கல்விச் சான்றிதழ்,

பன்னாட்டு இளம்நிலை பட்டம் மற்றும் பிற வாரியங்களுடன் இணைக்கப்பட்ட அனைத்து சுய நிதி தனியார் பள்ளிகள், தொடர்பாக தனியார் பள்ளிகளின் இயக்குநர்;

(iv) அரசிடமிருந்து மானியம் பெறும் அல்லது பெறாத அனைத்து கல்வி அல்லது பயிற்சி அளிக்கும் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களைப் பொறுத்து, கல்வி ஆராய்ச்சி மற்றும் பயிற்சிக்கான மாநில மன்றத்தின் இயக்குநர் எனப் பொருள்படும்.

(h) "கல்வி முகவாண்மை" என்பது தனியார் பள்ளி ஒன்றினை நிறுவும் நோக்கங்களுக்காக 2013ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் 18/2013) பிரிவு 8இன்படி பதிவு செய்யப்பட்ட நிறுமம் ஒன்று அல்லது 1860ஆம் ஆண்டு சங்கங்கள் பதிவு சட்டத்தின்படி (மையச் சட்டம் XXI/1860) அல்லது 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 27/1975) பதிவு செய்யப்பட்ட சங்கம் அல்லது 1882ஆம் ஆண்டு இந்திய பொறுப்புக் கட்டளை சட்டத்தின்படி (மையச் சட்டம் 2/1882) ஏற்படுத்தப்பட்ட பொறுப்புக் கட்டளை ஒன்று எனப் பொருள்படும்;

(i) "அரசு" என்பது மாநில அரசு எனப் பொருள்படும்;

(j) மானியம்" என்பது தனியார் பள்ளி எதற்கும் மாநில நிதியிலிருந்து உதவியாக வழங்கப்படும் பணத் தொகை எதுவும் எனப் பொருள்படும்;

(k) "சிறுபான்மையினர் பள்ளி" என்பது அரசமைப்புச் சட்டத்தின் அமைப்புவிதி 30 கூறு (1)இன்படி அவ்வாறு செய்வதற்கு உரிமை பெற்றிருக்கிற மதம் அல்லது மொழி அடிப்படையிலான சிறுபான்மையினர் எவராலும் அதனுடைய விருப்பத்தின் பேரில் நிறுவப்பட்ட மற்றும் நிர்வகிக்கப்படும் தனியார்பள்ளி ஒன்று என்றும் அல்லது மாநில அரசால் சிறுபான்மையினர் கல்வி நிறுவனங்களுக்கான தேசிய ஆணையத்தால் அவ்வாறு விளம்புகை செய்யப்பட்டது என்றும் பொருள்படும்.

(l) "அறிவிக்கை"என்பது இந்தச் சட்டத்தின்படி அரசால் பிறப்பிக்கப்பட்டு தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்பட்ட அறிவிக்கை எதுவும் எனப் பொருள்படும்.

(m) "தனியார் பள்ளி" என்பது இந்தச் சட்டத்தின்படி தகுதியுடைய அதிகார அமைப்பால் அங்கீகரிக்கப்பட்ட கல்வி முகவாண்மை ஒன்றினால் அரசிடமிருந்து மானியம் பெற்றோ அல்லது பெறாமலோ நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்படும் அல்லது பராமரிக்கப்படும் விளையாட்டுப் பள்ளி,

மழலையர் பள்ளி மற்றும் ஆரம்ப, நடுநிலை, உயர்நிலை மற்றும் மேல்நிலை பள்ளிக் கல்வி, ஆசிரியர் பயிற்சி நிறுவனம் எனப் பொருள்படும். ஆனால்,–

(i) மத்திய அரசால் அல்லது மாநில அரசால் அல்லது வட்டார அதிகார அமைப்பு எதனாலும் நிறுவப்பட்டு, நிர்வகிக்கப்படும் அல்லது பராமரிக்கப்படும்;

(ii) மதக் கல்வி மட்டும் கற்பிக்கும் ஆனால் பிற கல்வி எதனையும் கற்பிக்காத

பள்ளி அல்லது நிறுவனத்தை உள்ளடக்காது;

(n) "வகுத்துரைக்கப்பட்டது" என்பது இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகளால் வகுத்துரைக்கப்பட்டது எனப் பொருள்படும்;

(o) "அங்கீகாரம் பெற்ற பள்ளி" என்பது இந்தச் சட்டத்தின்படி தகுதியுடைய அதிகார அமைப்பால் அங்கீகாரம் அளிக்கப்பட்ட ஒரு தனியார் பள்ளி எனப் பொருள்படும்;

(p) "அங்கீகாரம்" என்பது தகுதியுடைய அதிகார அமைப்பால் இந்தச் சட்டத்தின்படி விதிக்கப்பட்டுள்ள தரம் மற்றும் நிபந்தனைகளுக்கு இணங்க பள்ளி ஒன்றினை நடத்துவதற்கு வழங்கப்படும் முறையான ஒரு சான்று எனப் பொருள்படும்;

(q) "பள்ளிக்குழு" என்பது பிரிவு 14இன்படி உருவாக்கப்பட்ட பள்ளிக்குழு எனப் பொருள்படும்;

(r) "செயலாளர்" என்பது பிரிவு 14இல் குறிப்பிடப்பட்டுள்ள செயலாளர் எனப் பொருள்படும்;

(s) "பணியாளர்" என்பது தனியார் பள்ளி ஒன்றின் கற்பிக்கும் மற்றும் கற்பிக்காத பணியாளர் ஆகிய இருவரையும் உள்ளடக்கும் மற்றும் பொருள்படும்.

## அத்தியாயம் –II

## தனியார் பள்ளிகளை நிறுவுவதற்கான அனுமதி, பதிவு மற்றும் அங்கீகாரம்

3. **பள்ளிக் கல்வியை ஒழுங்குப்படுத்துவதற்கான அதிகாரம்**.– (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு புறம்பாக தனியார் பள்ளி நிறுவப்படுத்துதலோ மற்றும் நிர்வகிக்கப்படுதலோ கூடாது.

(2) அரசு அல்லது இது சம்பந்தமாக வகுத்துரைக்கப்படும் தகுதியுடைய அதிகார அமைப்பானது,

(a) தனியார் பள்ளிகளில் கல்வியின் பல்வேறு நிலைகளையும், கல்வி திட்டம், பாடத்திட்டம் உள்ளிட்ட பிற செயல்பாடுகளை, ஒழுங்குப்படுத்துவதற்கும்;

(b) வகுத்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்கு இணங்கி கல்வி முகவாண்மையானது பள்ளி

ஒன்றை நிறுவுவதற்கு மற்றும் நிர்வகிப்பதற்கு அனுமதிப்பதற்கும்;

(c) தனியார் பள்ளி எதற்கும் அங்கீகாரம் வழங்குவதற்கும்;

(d) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதையும் மீறினால் தனியார் பள்ளி எதனின் அங்கீகாரத்தை திரும்பப் பெறுவதற்கும் அல்லது பணத்தண்டம் விதிப்பதற்கும் அல்லது அத்தகைய தனியார் பள்ளிக்கு எதிராக குற்றவியல் நடவடிக்கை எடுப்பதற்கும்;

(e) அவ்வப்போது மாணவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு தரநிலைகள் அல்லது வழிகாட்டு நெறிமுறைகளை குறிப்பிடுவதற்கும்;

(f) பள்ளி சேர்க்கைகள், கட்டணம் வசூலித்தல் மற்றும் தேர்வுகளை நடத்துவதை ஒழுங்குபடுத்துவதற்கும்;

(g) பணியாளர்களின் குறைந்தபட்ச தகுதியை வகுத்துரைப்பதற்கும்;

(h) நாட்டின் இறையாண்மையை, சமூக நல்லிணக்கத்தை மற்றும் சமயச் சார்பற்ற தன்மையை அச்சுறுத்துகிற, நாட்டின் ஒழுக்கம் மற்றும் பண்பாட்டு தர நிலைகளுக்கு ஒவ்வாது என அறியப்பட்ட மற்றும் தனியார் பள்ளி மாணவர்களின் மனநிலையில் விரும்பத்தகாத தாக்கத்தை

ஏற்படுத்துகின்ற சில புத்தகங்களை அல்லது வெளியீடுகளை அல்லது மின்னணு சாதனங்களை தடைசெய்வதற்கும்;

(i) மாணவர்கள் மற்றும் பள்ளிக் கல்வியின் நலன் கருதி தேவையானது மற்றும் உகந்தது எனக் கருதப்படும் பிற நடவடிக்கையை எடுப்பதற்கும்,

அதிகாரம் கொண்டிருக்கும்.

4. **தனியார் பள்ளி அனுமதி பெற வேண்டும்**.– கல்வி முகவாண்மை எதுவும், தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் எழுத்துப்பூர்வமான முன் அனுமதியின்றி மற்றும் அத்தகைய அனுமதியில் குறிப்பிடப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு முரணாக தனியார் பள்ளி எதனையும் நிறுவுதல் கூடாது.

5. **அனுமதிக்கான விண்ணப்பம்**.– தனியார் பள்ளி ஒன்றை நிறுவுவதற்கான அனுமதியைப் பெறுவதற்கான விண்ணப்பம் ஒவ்வொன்றும் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிற்கு வகுத்துரைக்கப்படும் படிவத்தில் அத்தகைய கட்டணங்கள் மற்றும் ஆவணங்களுடன் இணைக்கப்பட்டு இருத்தல் வேண்டும்.

6. **அனுமதி வழங்குதல்**.– பிரிவு 5இன்படி விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டதன் பேரில் தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு,–

(a) விண்ணப்பத்துடன் சேர்த்து சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்த பின்பு, அனுமதியை வழங்குவதற்கு அல்லது மறுப்பதற்கான முடிவை எடுத்து

விண்ணப்பதாரருக்கு அதற்கான காரணங்களை கூறி அதனுடைய முடிவை விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்க்குள் தெரிவிக்க வேண்டும்:

**வரம்புரை:** விண்ணப்பதாரருக்கு அவருடைய முறையீட்டினை செய்வதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி தனியார் பள்ளியை நிறுவுவதற்கான அனுமதி மறுக்கப்படுதல் கூடாது.

(b) தனியார் பள்ளி ஒன்றை நிறுவுவதற்கான அனுமதி மறுக்கப்படுகின்றபோது, விண்ணப்பதாரர் அத்தகைய தகவல் பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்படும் முறையில் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்ய வேண்டும் மற்றும் அதன் மீதான மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பின் முடிவே இறுதியானதாகும்.

7. **அங்கீகாரச் சான்றுக்கான விண்ணப்பம்.–** (1) கல்வி முகவாண்மை ஒவ்வொன்றும் பிரிவு 6இன்படி அனுமதிக்கான ஆணை பெற்றப்பட்ட தேதியிலிருந்து மூன்று ஆண்டு காலத்திற்குள் வகுத்துரைக்கப்படும் படிவத்தில், அத்தகைய கட்டணம் மற்றும் ஆவணங்களுடன் சேர்த்து அங்கீகாரச் சான்றிதழ் பெறுவதற்காக தகுதியுடைய அதிகாரஅமைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(2) உட்பிரிவு (1) இல் குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் அங்கீகாரச் சான்றிதழுக்கான விண்ணப்பம் எதுவும் பெறப்படாமல் இருந்தால், பிரிவு 6இன்படி வழங்கப்பட்ட அனுமதி உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள காலம் முடிவடையும் தேதிஎன்றும் அது முதற்கொண்டும் காலாவதியாகிவிட்டதாகக் கருதப்படுதல் வேண்டும்.

8. **அங்கீகாரச் சான்றிதழ் வழங்குதல்.–** (1) அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்படுவதற்கான விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டதன் அடிப்படையில் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு,–

(a) பள்ளியில் கல்வியின் தரநிலைகளைப் பராமரிப்பதற்கு உரிய ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றதை; மற்றும்

(b) இச்சட்டத்தின் வகைமுறைகள், அதன்படி செய்யப்பட்ட விதிகள் பின்பற்றப்பட்டுள்ளதை.

உறுதிசெய்ய ஆய்வு செய்யலாம் அல்லது ஆய்வு நடத்தச் செய்விக்கலாம் மற்றும் வகுத்துரைக்கப்படும் அத்தகைய காலத்திற்கு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தனியார் பள்ளிக்கு அங்கீகாரச் சான்றிதழை வழங்கலாம்.

(2) தகுதியுடைய அதிகாரஅமைப்பு உட்பிரிவு (1)இன்படி அங்கீகாரத்திற்கான விண்ணப்பம் ஒன்றின் பேரில் ஆணைகள் வழங்குவதற்கு முன்பு பின்வரும் விவரங்களை கருத்தில் எடுத்துக்கொள்ள வேண்டும் அதவாது:–

(a) அந்த வட்டாரத்தில் ஏற்கனவே உள்ள பள்ளிகளின் போதிய எண்ணிக்கை:

(b) அந்த வட்டாரத்தில் தனியார் பள்ளிக்கான தேவை;

(c) கருதப்பட்ட மாணவர்களின் எண்ணிக்கை;

(d) பள்ளியில் மாணவர்களுக்கு இருக்கும் விளையாட்டு மைதானத்தின் பரப்பளவு மற்றும் பள்ளி மாணவர்களின் எண்ணிக்கைக்கு ஏற்பப் போதுமான விளையாட்டு மைதானம்;

(e) மாணவர்கள் மற்றும் ஆசிரியர்களுக்கு இருக்கும் வசதிகள்;

(f) கருவிகள், ஆய்வுக்கூடம், நூலகம் மற்றும் கற்பித்தலுக்கான பிற வசதிகள் மற்றும்;

(g) வகுத்துரைக்கப்படும் பிற விவரங்கள்.

(3) உட்பிரிவு (1)இன்படியான அங்கீகாரத்திற்கான சான்றிதழ் வகுத்துரைக்கப்படும் படிவத்தில் மற்றும் அத்தகைய காலத்திற்குள் வழங்கப்படுதல் வேண்டும்.

(4) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு கருத்தில் அங்கீகாரச் சான்றிதழை வழங்குவதற்கான விண்ணப்பம் உட்பிரிவுகள் (1) மற்றும் (2)இன் வகைமுறைகள் எதனையும் நிறைவு செய்யவில்லை என்றால் தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு அங்கீகாரம் வழங்க மறுக்க வேண்டும் மற்றும் விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாத காலத்திற்குள்

விண்ணப்பதாரருக்கு அதன் முடிவை அதற்கான காரணங்களுடன் தெரிவிக்க வேண்டும்:

**வரம்புரை:** விண்ணப்பதாரருக்கு அவருடைய முறையீட்டினை எடுத்துரைப்பதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி அங்கீகாரம் வழங்குதல் மறுக்கப்படுதல் கூடாது.

(5) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பால் அங்கீகாரம் மறுக்கப்படுகின்றபோது விண்ணப்பதாரர் அங்கீகாரம் வழங்குதலை மறுக்கும் ஆணை பெறப்பட்ட தேதியிலிருந்து முப்பது நாட்களுக்குள் வகுத்துரைக்கப்படும் முறையில் மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பிற்கு மேல்முறையீடு செய்ய வேண்டும்.அதன் மீதான மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பின் முடிவே இறுதியானதாகும்.

(6) உட்பிரிவு (3)இன்படி வழங்கப்பட்ட அங்கீகார சான்றிதழை புதுப்பித்தலுக்கான விண்ணப்பம், வகுத்துரைக்கப்படும் படிவத்தில் அத்தகைய கட்டணங்கள் மற்றும் ஆவணங்களுடன் சேர்த்து அங்கீகாரத்தின் காலம் முடிவடையும் தேதிக்கு முந்தைய மூன்று மாத காலத்திற்குள் சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும். அங்கீகாரம் வழங்குவதற்கான இந்தப் பிரிவின் வகைமுறைகள் தேவையான மாற்றங்களுடன் அங்கீகாரச் சான்றிதழின் புதுப்பித்தலுக்குப் பொருந்துதல் வேண்டும்.

(7) அங்கீகாரச் சான்றிதழ் வழங்கப்பட்டிருக்காத அல்லது அங்கீகாரப் புதுப்பித்தலுக்கான சான்றிதழ் வழங்கப்பட்டிருக்காத பள்ளி எதிலும் குழந்தை எதுவும் சேர்க்கப்படுதல் கூடாது.

9. **இணைப்பு.–** கல்வி முகவாண்மை எதுவும் பிரிவு 8இன்படி தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பிடமிருந்து அங்கீகாரச் சான்றிதழைப் பெறாமல் மாநில பள்ளிக்கல்வி வாரியத்திற்கு அல்லது பிற எந்த வாரியத்திற்கும் இணைப்பிற்காக விண்ணப்பித்தல் கூடாது.

10. **தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பால் அங்கீகாரம் திரும்பப் பெறப்படுதல்.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் விதிகள் அல்லது பணிப்புரைகள் ஒரு தனியார் பள்ளிக்கு பொருந்துகிற அளவுக்கு இச்சட்டம் அல்லது விதிகள் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்காத அந்தத் தனியார் பள்ளியின் அங்கீகாரம் தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு எந்த நேரத்திலும் எழுத்துப்பூர்வமான காரணங்களுக்காக ஆணை மூலமாக நிரந்தரமாக திரும்பப் பெறலாம்:

**வரம்புரை:** இந்தப் பிரிவின்படி அங்கீகாரத்தைத் திரும்பப் பெறும் ஆணை எதுவும் முகவாண்மைக்கு அதன் முறையீட்டிற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி தகுதியுடைய அதிகார அமைப்பால் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

**மேலும் வரம்புரை**: இந்தப் பிரிவின்படி அங்கீகாரத்தை திரும்பப் பெறும் ஆணை கல்வி ஆண்டு ஒன்றின்போது செய்யப்பட்டிருக்கிறது என்றால் அத்தகைய ஆணை கல்வி ஆண்டின் இறுதியில் மட்டுமே செயல்திறம் பெறும்.

**கூடுதல் வரம்புரை:** அங்கீகாரம் பெற்ற பிற பள்ளி எதிலும் மாணவர்களுடைய கற்பித்தலின் தொடர்ச்சிக்குத் தேவையான ஏற்பாடுகளைச் செய்யாமல் இந்தப் பிரிவின்படி தனியார் பள்ளியின் அங்கீகாரத்தை திரும்பப் பெறும் ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

11. **அங்கீகாரம் திரும்பப் பெறபடுவதன் விளைவு.–** அங்கீகாரத்தை திரும்பப் பெறுவதன் விளைவாக அத்தகைய பள்ளியின் கல்வி முகவாண்மை,–

(a) பள்ளியை நடத்துவதை நிறுத்துதல் வேண்டும்;

(b) அரசு நிதி உதவி பெறும் பள்ளியைப் பொறுத்த வரையில், அரசால் நிதி உதவியாக அளிக்கப்பட்ட அல்லது வழங்கப்பட்ட நிலம், கட்டிடங்கள் மற்றும் பிறபொருட்கள் போன்ற அசையும் மற்றும் அசையாச் சொத்துக்கள் அனைத்தும் அரசிடம் ஒப்படைக்கப்பட வேண்டும்; மற்றும்

(c) இது சம்பந்தமாக தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினால் அதிகாரமளிக்கப்பட்ட அலுவலரிடம் அங்கீகாரம் திரும்பப் பெறப்படும் தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் அந்தப் பள்ளியின் அனைத்து கோப்புகளையும் மற்றும் ஆவணங்களையும் ஒப்படைக்க வேண்டும்.

## அத்தியாயம் III
## கல்வி முகவாண்மை மற்றும் பள்ளிக்குழு

12. **கல்வி முகவாண்மை.–** இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியில் அல்லது அதற்கு முன்பு நிறுவப்பட்ட தனியார் பள்ளி ஒன்றின் கல்வி முகவாண்மை ஒன்று, ஒரு தனி நபராக அல்லது நபர்களின் குழுவாக அல்லது பிற அமைப்பு எதுவுமாக இருக்கின்றபோது, அத்தகைய தனி நபர், குழு அல்லது பிற அமைப்பு எதுவும், இந்தச்

சட்டத்தின் தொடக்க தேதியிலிருந்து ஆறு மாத காலஅளவிற்குள் 1975ஆம் ஆண்டு தமிழ்நாடு சங்கங்கள் பதிவுச் சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 27/1975) பதிவு செய்யப்பட்ட சங்கமாக அமைக்க வேண்டும் அல்லது 2013ஆம் ஆண்டு நிறுமங்கள் சட்டத்தின் (மையச் சட்டம் 18/2013) பிரிவு 8இன்படி பதிவு செய்யப்பட்ட நிறுமம் ஒன்றாக அல்லது 1882ஆம் ஆண்டு இந்திய பொறுப்புக் கட்டளைச் சட்டத்தின்படி (மையச் சட்டம் 2/1882) பொறுப்புக் கட்டளையாக அமைத்துக்கொள்ள வேண்டும். கல்வி முகவாண்மையின் செயற்பணிகளை புரியும் அத்தகைய சங்கம் அல்லது நிறுமம் அல்லது பொறுப்புக் கட்டளை ஆகியவை மட்டுமே இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக கல்வி முகவாண்மையாகக் கருதப்படுதல் வேண்டும்.

13. **கல்வி முகவாண்மை அமைப்பில் மாற்றம் அல்லது கல்வி முகவாண்மையை மாற்றுதல்:–** (1) (a) கல்வி முகவாண்மை ஒன்றின் அமைப்பில் அல்லது துணை விதிகளில் மாற்றம் அல்லது கல்வி முகவாண்மையின் அமைப்பு முறையில் திருத்தம் எதுவும் இருக்கின்றபோது அவ்வாறு மாற்றம் செய்யப்பட்ட தேதியிலிருந்து பதினைந்து நாட்களுக்குள் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிற்கு அத்தகைய மாற்றங்கள் அல்லது திருத்தங்கள் தொடர்பான ஆவணங்கள் அனைத்தையும் கல்வி முகவாண்மை சமர்ப்பிக்க வேண்டும்;

(b) தனியார் பள்ளியின் கல்வி முகவாண்மை ஒன்று பள்ளியின் மேலாண்மையை ஒரே மாதிரியான நோக்கங்களைக் கொண்டிருக்கும் பிற கல்வி முகவாண்மைக்கு மாற்றம் செய்யக் கருதும்போது அத்தகைய கல்வி

முகவாண்மை தேவையான ஒப்புதலுக்காக தகுதியுடைய அதிகாரஅமைப்பிற்கு விண்ணப்பிக்க வேண்டியது கட்டாயமாகும்;

(c). கூறு (b)இன்படியான விண்ணப்பம் ஒன்று வகுத்துரைக்கப்படும் ஆவணங்களோடு சேர்த்து அத்தகைய படிவத்தில் இருத்தல் வேண்டும்.

(2) உட்பிரிவு (1)இன் கூறு (b)இன்படி விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டதன் பேரில் தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு அதற்குப் பொருத்தம் எனத் தோன்றுகிற அத்தகைய விசாரணையைச் செய்த பின்பு மற்றும் இந்தச் சட்டத்தின் வகை முறைகள் அல்லது விதிகள் அல்லது அதன்படி பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகளுக்கு இணங்க அவ்வாறு பெறும் கல்வி முகவாண்மை மாற்றப்பட்ட தனியார் பள்ளியை நன்றாக பராமரிக்கும் மற்றும் மேலாண்மை செய்யும் என்று அது திருப்தியடைந்தால் அத்தகைய விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் விண்ணப்பதாரருக்கு அதன் முடிவைத் தெரிவிக்கலாம் மற்றும் தெரிவிக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு அத்தகைய மாற்றுதலுக்கு ஒப்புதலளிக்கலாம்.

14. **பள்ளிக் குழுவின் அமைப்பு.–** (1) தனியார் பள்ளி ஒன்றின் கல்வி முகவாண்மை ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் பள்ளிக்குழு ஒன்றினை அமைக்க வேண்டும்:

**வரம்புரை**: கல்வி முகவாண்மை ஒன்று, ஒன்றுக்கு மேற்பட்ட தனியார் பள்ளிகளை நிறுவி நிருவகித்துக் கொண்டிருக்கிறபோது அல்லது பராமரித்துக்

கொண்டிருக்கிறபோது அத்தகைய கல்வி முகவாண்மை தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் முன் அனுமதியுடன் ஒரு பொதுப் பள்ளிக் குழுவைக் கொண்டிருக்கலாம்.

(2) பள்ளிக்குழு அதனுடைய அலுவல் நடவடிக்கை தொடர்பாக வகுத்துரைக்கப்படும் அத்தகைய நேரங்களில் மற்றும் இடங்களில் கூடுதல் வேண்டும் மற்றும் நடைமுறை விதிகளை பின்பற்றுதல் வேண்டும்:

**வரம்புரை:** பள்ளிக்குழு குறைந்தபட்சம் மூன்று மாதங்களுக்கு ஒருமுறையாவது கூடுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டம் மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, பள்ளிக்குழு பின்வரும் செயற்பணிகளை ஆற்றலாம். அதாவது,–

(a) தனியார் பள்ளியின் பொது நிருவாகம்;

(b) தனியார் பள்ளியின் பணியாளரை பணியமர்த்தம் செய்தல், அவர்களுடைய சம்பளம் மற்றும் படிகளை நிர்ணயம் செய்தல் மற்றும் அவர்களுடைய கடமைகள் மற்றும் பணிநிபந்தனைகளை வரையறை செய்தல்; மற்றும்

(c) தனியார் பள்ளியின் பணியாளருக்கு எதிராக ஒழுங்கு நடவடிக்கை எடுத்தல்.

(4) பள்ளிக்குழு ஒவ்வொன்றும், கல்வி முகவாண்மையால் பணியமர்த்தம் செய்யப்படும் செயலாளர் ஒருவரை பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் வகுத்துரைக்கப்படும் அத்தகைய அதிகாரங்களைச் செலுத்தவும் செயற்பணிகளை ஆற்றவும் வேண்டும்.

15. **கல்வி முகவாண்மையின் பொறுப்பு.**– (1) இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக, பள்ளிக்குழு அதிகார வரம்பைக் கொண்டிருக்கிற விவரம் எதன் தொடர்பாகவும் அந்தப் பள்ளிக் குழுவால் எடுக்கப்பட்ட முடிவு அல்லது செயல் எதுவும் கல்வி முகவாண்மையால் எடுக்கப்பட்ட முடிவாக அல்லது செயலாகக் கருதப்படுதல் வேண்டும்.

(2) தனியார் பள்ளி ஒன்றின் செயலாளர் அல்லது பள்ளிக் குழுவின் உறுப்பினர் எவரும் அலுவற்பணிகளை மேலாண்மை செய்வதில் குறைபாடுகள் அல்லது முறைகேடுகளுக்கு பொறுப்புடையவராக இருக்கின்றார் என்று தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு, திருப்தியடையும்போது, சம்பந்தப்பட்ட நபருக்கு எதிராக கல்வி முகவாண்மை அதற்கு பொருத்தம் எனத் தோன்றுகிற நடவடிக்கையை எடுத்தல் வேண்டும்.

(3) தகுதியுடைய அதிகார அமைப்பு எழுத்துப் பூர்வமாக பதிவு செய்யப்பட வேண்டிய காரணங்களுக்காக ஆணை ஒன்றின் மூலம் பள்ளிக் குழுவின் செயலாளர் அல்லது உறுப்பினர் எவரும் அலுவலகத்தில் பணி செய்ய பொருத்தமுடையவர் இல்லை என்று விளம்புகை செய்யலாம் மற்றும் நிகழ்வுக்கேற்ப, அந்தப் பள்ளியின் செயலாளரை அல்லது அத்தகைய உறுப்பினரை நீக்குவதற்கு கல்வி முகவாண்மைக்கு அறிவுறுத்தலாம்:

**வரம்புரை:** ஆனால், நிகழ்வுக்கேற்ப, பள்ளிக் குழுவின் செயலாளர் அல்லது உறுப்பினரின் பதவியைக் கொண்டிருக்கும் நபருக்கு, முறையீடு செய்வதற்கான வாய்ப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருந்தாலன்றி இந்த உட்பிரிவின்படியான ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

(4) உட்பிரிவு (3)இன்படி தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிடமிருந்து பணிப்புரை ஒன்று பெறப்பட்டதன் பேரில் விதிகளுக்கு அல்லது நன்னடத்தை விதிகளுக்கு முரணாக எது எவ்வாறிருப்பினும், அந்தக் கல்வி முகவாண்மை, பள்ளிக் குழுவின் செயலாளர் அல்லது உறுப்பினரின் பதவியிலிருந்து சம்பந்தப்பட்ட நபரை உடனடியாக அவருடைய இடத்தில் தகுதியுடைய பிற நபரை பணியமர்த்தம் செய்ய வேண்டும்.

(5) உட்பிரிவு (4)இல் அடங்கியுள்ள எது எவ்வாறு இருப்பினும் மற்றும் பிரிவு 31இல் அடங்கியிருக்கும் வகைமுறைகளுக்கு முரணின்றி கல்வி முகவாண்மை, உட்பிரிவு (3)இன்படி பிறப்பிக்கப்பட்ட எதனையும் வேண்டுமென்றே செய்யாமல் இருந்தால் அல்லது வேண்டுமென்றே இணங்க மறுத்தால் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு எழுத்துப் பூர்வமான ஆணை வாயிலாக அந்தத் தனியார் பள்ளியின் பள்ளிக் குழுவின் செயலாளர் அல்லது உறுப்பினர் பதவியிலிருந்து அத்தகைய நபரை உடனடியாக நீக்கலாம்.

## அத்தியாயம் IV
## சிறுபான்மையினர் தனியார் பள்ளிகளுக்கான சிறப்பு வகைமுறைகள்

16. **சிறுபான்மையினர் தனியார் பள்ளி ஒன்றினை நிறுவுவதற்கான உரிமை.–** (1) சமயம் அல்லது மொழி அடிப்படையிலான சிறுபான்மையினர்களின் நன்மையை முதன்மையாகக் கொண்டு அத்தகைய சிறுபான்மை கல்வி முகவாண்மை எதுவும் அதனுடைய விருப்புரிமையின்படி தனியார் பள்ளி ஒன்றை நிறுவி நிர்வகிப்பதற்கு உரிமையுடையதாக இருக்கும்.

(2) தனியார் பள்ளி ஒன்றிற்கு சிறுபான்மை தகுதியை கோரும் அத்தகைய கல்வி முகவாண்மை ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் அத்தகைய ஆவணங்களுடன் அத்தகைய படிவத்தில் அரசுக்கு விண்ணப்பிக்க வேண்டும்.

(3) உட்பிரிவு (2)இன்படி விண்ணப்பம் பெறப்பட்டதன் பேரில் அரசு, விண்ணப்பதாரரால் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்களை சரிபார்த்த பின்பு தேவை என்றால் விண்ணப்பதாரரின் கூற்றினை கேட்பதற்கான வாய்ப்பு ஒன்றை அளித்த பின்பு, குறிப்பிடப்படும் காலத்திற்குள், தனியார் பள்ளிக்கு சிறுபான்மை தகுதியை வழங்குவதா அல்லது வேண்டாமா அல்லது சிறுபான்மையினர் தகுதிக்கான அனுமதியைத் தொடரலாமா என்பதை முடிவு செய்ய வேண்டும்.

17. **கல்வி முகவாண்மை மாற்றப்படுவதன்பேரில் பள்ளி ஒன்றின் சிறுபான்மை தகுதியின் நிலை.**— தனியார் பள்ளி ஒன்றின் சிறுபான்மை தகுதி அரசின் முன் அனுமதியுடன் அதே சிறுபான்மை தகுதியுடன் இருக்கும் பிற கல்வி முகவாண்மைக்கு அத்தகைய பள்ளியின் மேலாண்மை மாற்றப்பட்டிருக்கின்றபோது மட்டுமே அத்தகைய தனியார் பள்ளியின் சிறுபான்மைத் தகுதியைத் தக்கவைத்துக் கொள்ளமுடியும்.

18. **சிறுபான்மையினர் பள்ளி ஒன்றிற்கான சிறப்பு அலுவலரின் பணியமர்த்தம்.**— பிரிவு 31 உட்பிரிவு (1)இன்படி சிறுபான்மை பள்ளி ஒன்றின் மேலாண்மை தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டிருக்கின்றபோது, தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு அத்தகைய தற்காலிக நிறுத்தத்திற்கு உடன் முன்பு சொன்னச் சிறுபான்மை பள்ளியை நிருவகித்துக் கொண்டிருக்கும் சிறுபான்மை

வகுப்பைச் சேர்ந்த நபர் ஒருவரை சிறப்பு அலுவலராகப் பணியமர்த்த வேண்டும்.

19. **சிறுபான்மையினர் பள்ளிகளுக்கான விலக்கு:–** சிறுபான்மையினர் பள்ளிகளின் சிறுபான்மைத் தன்மையை பாதிக்கக்கூடிய, இந்தச் சட்டத்தின் அத்தகைய வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது ஆணைகளில் இருந்து அத்தகைய சிறுபான்மையினர் பள்ளிகளுக்கு விலக்கு அளிக்க அரசு அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் V

## தனியார் பள்ளிகளுக்கான கட்டுப்பாடு

20. **மாணவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு.–** (1) கல்வி முகவாண்மை ஒவ்வொன்றும் முடிந்த வரையில் மனரீதியிலான துன்புறுத்தல் அல்லது உடல் ரீதியான காயம் அல்லது பாலியல் தொல்லையிலிருந்து மாணவர்களை பாதுகாத்தல் உள்ளிட்ட மாணவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பை உறுதி செய்யும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

(2) கல்வி முகவாண்மை ஒவ்வொன்றும் மாணவர்களின் நலன் மற்றும் பாதுகாப்பு தொடர்பாக வகுத்துரைக்கப்படும் நிபந்தனைகள், அரசால் அல்லது அரசால் அதிகாரம் அளிக்கப் பெற்ற தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்படும் குறிப்பிட்ட பணிப்புரை எதுவும் கண்டிப்பான முறையில் பின்பற்றப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

21. **தரமான கல்வியை உறுதி செய்தல்.–** (1) தனியார் பள்ளி ஒவ்வொன்றும், இணைக்கப்பட்டுள்ள தேர்வுக்

குழுமத்திற்கு இணங்கிய கல்வித் திட்டம், பாடத்திட்டம், கல்வியின் பலன் மற்றும் கல்வியின் பல்வேறு நிலைகளுக்கு வகுத்துரைக்கப்பட்ட வழிகாட்டு நெறி முறைகள் ஆகியவற்றைக் கண்டிப்பான முறையில் பின்பற்றுதல் வேண்டும்.

(2) தனியார் பள்ளி ஒவ்வொன்றிலும் நல்ல பாடத்திட்டம், இணைப் பாடத்திட்டம் மற்றும் பாடத்திட்டம் சாராத பிற நடவடிக்கைகள் விவேகமான முறையில் கலந்து இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.

(3) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் சம்பந்தப்பட்ட வாரியத்தினால் கல்வியின் பல்வேறுபட்ட நிலைகளுக்காக வகுத்துரைக்கப்பட்ட மதிப்பீட்டு வகையைப் பின்பற்றுதல் வேண்டும்.

22. **தேர்வுகளை நடத்துதல் மற்றும் விடைத் தாள்களை மதிப்பீடு செய்தல்.–** (1) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் உரிய அதிகார அமைப்புகள் கேட்டுக் கொண்டதன் பேரில் கட்டணமில்லாமல் வாரியம் எதனின் தேர்வுகள் எதனையும் நடத்துவதற்காக மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக அதன் கட்டிடங்கள், அறைகலன்களை மற்றும் பிற உள்கட்டமைப்புகள் ஆகியவைகளை வாரிய அதிகார அமைப்புகளிடம் ஒப்படைக்க வேண்டும்.

(2) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் உரிய அதிகார அமைப்புகள் கேட்டுக் கொண்டதன் பேரில் வாரியம் எதனின் தேர்வுகளை நடத்துவதற்காக மற்றும் விடைத்தாள்களை மதிப்பீடு செய்வதற்காக பணியில் உள்ள ஆசிரியர்களை மாற்றுப்பணிக்கு அனுப்ப வேண்டும்.

(3) தனியார் பள்ளி எதுவும் மாணவர் எவரையும் கற்றலில் குறைவு என்பதன் அடிப்படையில் வாரியத் தேர்வு எழுதுவதிலிருந்து தடுத்தல் கூடாது.

(4) தனியார் பள்ளிகளுக்கு இடையே நடைபெறும் நலக்கேடான போட்டிகளைத் தடுக்கும் விதத்தில் குறிப்பிடப்பட்ட நிபந்தனைகளுக்கு உட்பட்டு தனியார் பள்ளி ஒவ்வொன்றும் நடத்தல் வேண்டும்.

23. **சேர்க்கைக் காலத்தில் தனியார் பள்ளிகள் வெளிப்படுத்த வேண்டிய விவரங்கள்.**– தனியார் பள்ளி ஒவ்வொன்றும் ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் சேர்க்கையை தொடங்குவதற்கு குறைந்தபட்சம் முப்பது நாட்கள் முன்பு அதனுடைய அறிவிப்புப் பலகையில், இணையதளத்தில் அல்லது பிற எந்த வடிவத்திலும் பள்ளி தொடர்பான பொதுத் தகவல்களை வகுத்துரைக்கப்படும் விதத்தில் வெளியிட வேண்டும்.

24. **பெற்றோர் ஆசிரியர் சங்கம்.**– தனியார் பள்ளி ஒவ்வொன்றும் கல்வி மற்றும் கற்பிக்கப்படும் சூழலின் தரத்தை மேம்படுத்துவதில் பெற்றோர்கள் பங்கெடுத்துக் கொள்வதை ஊக்கப்படுத்துவதற்கும், செயற்பணிகளைச் செய்வதற்கும் வகுத்துரைக்கப்படும் முறையில் பெற்றோர் ஆசிரியர் சங்கம் ஒன்றை அமைக்க வேண்டும்.

25. **அதிகாரமளிக்கப்பட்ட** நபர் **அல்லது அதிகார அமைப்பிற்கு தகவல் அளித்தல் மற்றும் பணியாளருக்கு மாற்றுப்பணி அளித்தல்.–** (1) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் அரசால் அதிகாரமளிக்கப்பட்ட நபர் அல்லது அதிகார அமைப்பு எதுவும் குறிப்பாக மக்கட்தொகை கணக்கெடுப்பை நடத்தும் போது அல்லது தேர்தலின்போது, தேசிய சாதனை அளவீடு அல்லது மாநில அளவிலான

கற்கும் அளவீடு உள்ளிட்ட கேட்கப்படும் தகவல் எதையும் அளிக்க வேண்டும்.

(2) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் தேவை என்றால் அதனுடைய பணியாளர்களை மக்கள் கணக்கெடுப்பு அல்லது தேர்தல் பணியைச் செய்வதற்காக அனுப்ப வேண்டும்.

26. **கட்டணங்கள்.**–தனியார் பள்ளி எதுவும் 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலித்தலை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 22/2009) அமைக்கப்பட்ட கட்டண நிர்ணயித்தல் குழுவினால் நிர்ணயிக்கப்பட்ட கட்டணம் அல்லாத பிற கட்டணம் எதையும் வசூலித்தல் அல்லது எந்தவொரு பெயரிலும் அழைக்கப்படும் பிற தொகை எதனையும் பெறுதல் கூடாது.

27. **தனியார் பள்ளிகளின் நிதிகள் மற்றும் சொத்துக்களை பயன்படுத்துதல்.**– தனியார் பள்ளி ஒன்றினால் அல்லது அதன் பொருட்டு வசூலிக்கப்பட்ட பணம், பெறப்பட்ட மானியங்கள் மற்றும் வைத்து வரப்படும் பிற சொத்துக்கள் அனைத்தும் வகுத்துரைக்கப்படக்கூடிய முறையில் கருதப்பட்ட நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுதல் வேண்டும் மற்றும் கல்வி முகவாண்மை அதற்கான கணக்குப் பொறுப்பினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

28. **ஆய்வு மற்றும் விசாரணை.–** (1) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு தனியார் பள்ளி எதனையும் இது சம்பந்தமாக அதிகாரமளிக்கப்பட்ட நபரால் ஆய்வு நடத்தச் செய்ய உரிமை உடையதாக இருக்கும்.

(2) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு தனியார் பள்ளியின் அலுவற்பணிகள் சம்பந்தப்பட்ட எந்த விவரம் தொடர்பாக எங்கெல்லாம் விசாரணை தேவைப்படுகிறதோ அங்கு விசாரணை நடத்தும்படி செய்தல் வேண்டும்.

(3) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு அத்தகைய ஆய்வின் முடிவுகள் அல்லது விசாரணை மற்றும் அதன்பின்பு எடுக்கப்படும் நடவடிக்கை பற்றிய குறிப்புரையுடன் அதிகாரஅமைப்பின் கருத்துக்களை பள்ளிக்குழுவிற்கு தெரிவித்தில் வேண்டும்.

(4) பள்ளிக்குழு, அத்தகைய ஆய்வு அல்லது விசாரணையின் முடிவுகள் மீது எடுக்கப்பட்ட நடவடிக்கை அல்லது எடுக்கக் கருதப்பட்ட நடவடிக்கையைத், தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பிற்கு, இரண்டு மாத கால அளவிற்குள் தெரிவித்தல் வேண்டும்.

(5) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு மனநிறைவடையும் வகையில் உட்பிரிவு (4)இன்படி குறிப்பிடப்பட்டுள்ள காலத்திற்குள் நடவடிக்கையை எடுப்பதற்கு பள்ளிக்குழு தவறுகிறபோது, தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு அளிக்கப்பட்ட விளக்கத்தை அல்லது செய்யப்பட்ட முறையீட்டைக் கருத்தில் கொண்டதற்குப் பின்பு அதிகார அமைப்பு பொருத்தமுடையதாகத் தோன்றும் அத்தகைய பணிப்புரைகளைப் பிறப்பிக்கலாம் மற்றும் அந்தப் பள்ளி அத்தகைய பணிப்புரைகளுக்கு உடனடியாக இணங்கி நடத்தல் வேண்டும்.

29. **தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு முடிவுக்கு வருதல்.**– (1) தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்று மொழிப்பிரிவு எதுவும் தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் முன்அனுமதி

பெறாமல் நிகழ்விற்கேற்ப அந்த தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்று மொழிப்பிரிவில் கல்வி பயிலும் மாணவர்கள் தொடர்ந்து கல்வி கற்றப்பதற்கான வகுத்துரைக்கப்படும் அத்தகைய ஏற்பாடுகளைச் செய்யாமல் மூடப்படுதல் கூடாது.

(2) கல்வி ஆண்டு ஒன்றில் வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள், அத்தகைய படிவத்திலும் முறையிலும் தகுதியுடைய அதிகார அமைப்பிற்கு கல்வி முகவாண்மை எழுத்து வடிவில் முன்அறிவிப்பு ஒன்றை வழங்கியிருந்தாலன்றி தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பால் உட்பிரிவு (1)இன்படியான முன்அனுமதி எதுவும் வழங்கப்படுதல் கூடாது.

(3) உட்பிரிவு (2)இன்படி அறிவிப்பு பெறப்பட்டதன் பேரில் மற்றும் அதைக் கருத்தில் கொண்ட பின்பு,

(a) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு அது விதிக்கக்கூடிய நிபந்தனைகளுக்குட்பட்டு, நிகழ்விற்கேற்ப தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவு மூடப்படுவதற்கு முன் அனுமதி அளிக்கலாம்; அல்லது

(b) தகுதி வாய்ந்த அதிகார அமைப்பு உட்பிரிவு (2)இன்படி அளிக்கப்பட்ட அறிவிப்பு தவறாக இருப்பதாக; அல்லது

(ii) நிகழ்வுக்கேற்ப தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவு மாணவர்கள் படிப்புக்காக எந்தக் காலம் வரை

சேர்க்கைக்காக அனுமதிக்கப் பட்டிருக்கிறார்களோ, அதுவரையில் தொடர்ச்சிக்காக உட்பிரிவு (1)இன்படி தேவைப்படுகிற ஏற்பாட்டைச் செய்யாமல் இருந்தால்; அல்லது

(iii) தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்றுப் பிரிவு ஆகியவற்றை மூடப்படுவதற்கு கல்வி முகவாண்மையின் தவறான மேலாண்மை அல்லது கல்வியின் நிருவாகச் சீர்கேடு காரணமாக இருந்தால்; அல்லது

(iv) பள்ளி நிருவாகத்தில் போதிய நிதி வளங்கள் இருந்தும் தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப் பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவு மூடப்படுவதற்கு நிதி நிலைமைக் காரணமாக கூறப்பட்டு இருந்தால்; அல்லது

(v) நிகழ்வுக்கேற்ப, தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்றுவிக்கும் மொழிப்பிரிவு பிரிவுகள் மூடப்படுவதற்காக அளிக்கப்பட்ட காரணங்கள் நம்பத்தகுந்ததாக இல்லை என்றால்;

(vi) நிகழ்வுக்கேற்ப, தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவுகளை மூடுதல் தனியார் பள்ளி அமைந்துள்ள வட்டாரத்தில் மாணவர்களுக்கு கிடைக்கத்தக்க கல்வி

வாய்ப்பைப் பாதித்து எதிர் விளைவை ஏற்படுத்தி பாதிப்பிற்குள்ளாக்கும் என்பதை கவனத்தில் கொண்டால், அது எழுத்து மூலமான ஆணை மூலம் அதற்கான காரணங்களைத் தெரிவித்து நிகழ்வுக்கேற்ப தனியார் பள்ளி மூடப்படுதலுக்கு முன் அனுமதி அளிக்க மறுக்கலாம்:

**வரம்புரை:** இது சம்பந்தமாக கல்வி முகவாண்மைக்கு அதனுடைய தரப்பை முறையீடு செய்வதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு முன்அனுமதியை வழங்க மறுத்தல் கூடாது.

(4) (a) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு உட்பிரிவு (2)இன்படியான அறிவிப்புப் பெறப்பட்ட தேதியிலிருந்து மூன்று மாதங்களுக்கு மிகாமல் முடிந்தவரை விரைவாக, அறிவிப்பின் மீது அதனுடைய முடிவினை தெரிவிக்க வேண்டும்.

(b) நிகழ்வுக்கேற்ப, தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்றுவிக்கும் மொழிப் பிரிவை மூடுவதற்கான முன் அனுமதியை வழங்க மறுக்கின்றபோது கல்வி முகவாண்மை நிகழ்வுக்கேற்ப, தனியார் பள்ளியை அல்லது வகுப்பை அல்லது பாடப்பிரிவை அல்லது பயிற்று மொழிப்பிரிவை நடத்துவதைத் தொடர வேண்டும்.

(c) நடந்துக் கொண்டிருக்கும் கல்வி ஆண்டொன்றில் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பு நிகழ்வுக்கேற்ப, தனியார் பள்ளி அல்லது வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்று மொழிப்பிரிவை மூடுவதற்கான முன்அனுமதியை வழங்குகின்றபோது அத்தகைய மூடுதலானது மேற்சொன்ன கல்வி ஆண்டு முடிவடைந்த பின்பு மட்டுமே செல்திறத்திற்கு வரும். மூடுதலுக்கான அனுமதி அளிக்கப்பட்ட தேதியிலிருந்து தனியார் பள்ளியின் அங்கீகாரம் செயல்திறம் அற்றுப்போவதாகக் கருதப்படுதல் வேண்டும்.

30. **தனியார் பள்ளியின் சொத்தை உரிமை மாற்றம் செய்வதற்கானத் தடை**.– (1) கல்வி முகவாண்மை எதுவும் தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பின் எழுத்துப் பூர்வமான முன் அனுமதி இல்லாமல் விற்பனை, பரிமாற்றம், அடமானம், பொறுப்பு, அடகு, குத்தகை, கொடை அல்லது பிற எந்த முறையின் வாயிலாகவும் தனியார் பள்ளி ஒன்றின் சொத்தை உரிமை மாற்றம் செய்தல் கூடாது.

(2) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு, அத்தகைய உரிமைமாற்றத்திற்கான விண்ணப்பம் ஒன்று பெறப்பட்டதன்பேரில், அத்தகைய உரிமைமாற்றம் தனியார் பள்ளியின் நோக்கத்தை நிறைவேற்றுவதற்காக மற்றும் அத்தகைய உரிமைமாற்றத்தின் விளைவாகக் கிடைக்கும் வருவாய், கூறப்பட்ட நோக்கத்தினை நிறைவேற்றுவதற்காக முழுவதுமாக பயன்படுத்தப்பட உள்ளது என அது மனநிறைவடைந்தால், முன் அனுமதி வழங்கலாம்:

**வரம்புரை:** உட்பிரிவு (1)இன்படி விண்ணப்பதாரருக்கு அவர் தரப்பு முறையீட்டினை கூறுவதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி தகுதிவாய்ந்த அதிகார அமைப்பால் அனுமதி மறுக்கப்படுதல் கூடாது.

(3) (a) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு அந்த விண்ணப்பம் பெறப்பட்ட தேதியிலிருந்து அறுபது நாட்கள் காலஅளவிற்குள் அனுமதி வழங்குவதற்கான அல்லது அனுமதி வழங்க மறுக்கும் ஆணை ஒன்றை வழங்க வேண்டும்.

(b) தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு அத்தகைய அனுமதியை வழங்கும் போது அது பொருத்தம் எனக் கருதும் நிபந்தனைகளை விதிக்கலாம்.

(4) உட்பிரிவு (1)ற்கு முரணாக செய்யப்பட்ட உரிமைமாற்றம் எதுவும் இல்லா நிலையதாகவும் மற்றும் செல்லா நிலையதாகவும் இருத்தல் வேண்டும்.

## அத்தியாயம் VI

## சில சூழ்நிலைகளில் தனி அலுவலர்களின் பணியமர்த்தம்.

31. **சில சூழ்நிலைகளில் தனி அலுவலரின் பணியமர்த்தம்.**— (1) தகுதியுடைய அதிகாரஅமைப்பு ஏதேனும் தனியார் பள்ளியின் பள்ளிக் குழுவானது;—

(a) அத்தகைய தனியார் பள்ளி சீர்கேடான நிர்வாகத்திற்கு, நிதியைக் கையாடல் செய்ததற்கு அல்லது காலதாமதமாக செய்யப்பட்ட அல்லது முறையற்று செய்யப்பட்ட செயல்களுக்குப்

பொறுப்புடையதாக இருக்கின்றபோது; அல்லது

(b) அத்தகைய தனியார் பள்ளி நடந்துள்ள சட்ட விரோதமான நடவடிக்கைகளை தடுத்து நிறுத்த வேண்டுமென்றேத் தவறியிருக்கிற அல்லது மாநிலத்தின் பாதுகாப்பை, இறையாண்மையை அல்லது ஒற்றுமையை பாதிக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்டிருக்கிற அல்லது அரசால் தடை செய்யப்பட்டுள்ள அமைப்பு எதற்கும் பாதுகாப்பு அளித்திருக்கிற, அல்லது உதவி செய்திருக்கிறபோது; அல்லது

(c) இந்தச் சட்டம் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதி அல்லது ஆணை எதனாலும் அல்லது எதன்படியும் பள்ளிக் குழுவின் மீது சுமத்தப்பட்ட கடமைகள் எதையும் செய்து முடிக்க அல்லது ஒப்படைக்கப்பட்ட பணிகள் எதனையும் செயல்படுத்த வேண்டுமென்றே தவறினால், தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு, அத்தகைய பள்ளிக் குழுவிற்கு முறையீடு செய்வதற்கான வாய்ப்பு ஒன்றை அளித்த பின்பு, எழுத்து வடிவில் காரணங்களை பதிவு செய்து, ஆணை மூலம் பள்ளிக் குழுவை இடைநிறுத்தம் செய்தல் வேண்டும் மற்றும் மாணவர் நலனுக்காக பள்ளிக்குழு மீளஅமைக்கப்படும் வரை, ஒரு நபரை சிறப்பு அலுவலராக பணியமர்த்துதல் வேண்டும். தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு அது

தேவையெனக் கருதினால், உடனடி நடவடிக்கையாக அலுவல் பணியாளர்களின் நிதி அதிகாரங்களையும் இடைநிறுத்தம் செய்யலாம்.

(2) தனி அலுவலர் ஒருவரை பணியமர்த்தம் செய்வதற்காக அரசின் பரிசீலனையில் இருக்கின்றபோது தகுதியுடைய அதிகாரஅமைப்பு நேரடியாக பணம் செலுத்தும் முறையைப் பயன்படுத்தலாம்.

(3) உட்பிரிவு (1)இன்படி தனி அலுவலர் பணியமர்த்தம் செய்யப்பட்டிருக்கிறபோது,–

(a) பள்ளிக்குழு அதன் மீது விதிக்கப்பட்ட கடமைகளை நிறைவேற்றுவதையும் மற்றும் அதனிடம் ஒப்படைக்கப்பட்ட செயற்பணிகளைச் செய்வதையும் நிறுத்துதல் வேண்டும்.

(b) தனி அலுவலர், இந்தச் சட்டத்திற்கு முரணாக இல்லாத வகையில் முடிந்தவரை தனியார் பள்ளிக்கு பொருந்தத்தக்க சட்டம் எதற்கும் இணங்க பள்ளியை திறம்பட மேலாண்மை செய்வதற்கும் மற்றும் நடத்துவதற்கு தேவைப்படும் அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கத்திற்காக "சட்டம்" என்பது துணை விதி, விதிகள், ஒழுங்கு விதிகள் அல்லது சட்டத்தின் செல்லாற்றலைக் கொண்டிருக்கும் முறையாவணம் எதனையும் உள்ளடக்கும்.

## அத்தியாயம் VII

## பணியாளரின் பணியமர்த்தம் மற்றும் அவர்களின் பணி நிபந்தனைகள்

32. **பள்ளிகளில் பணியாளரின் பணியமர்த்தம் மற்றும் அவர்களின் பணி நிபந்தனைகள்**,– (1) இந்தச் சட்டத்தின் வகைமுறை மற்றும் அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு உட்பட்டு, தனியார் பள்ளி ஒன்றின் பள்ளிக்குழு அந்தப் பள்ளி திறம்பட செயலாற்றுவதற்குத் தேவை எனக் கருதும் பணியாளர்களைப் பணியமர்த்தம் செய்யலாம்.

(2) தனியார் பள்ளியின் பணியாளரின் தகுதிகள் மற்றும் எண்ணிக்கை வகுத்துரைக்கப்பட்ட விதத்தில் இருத்தல் வேண்டும்:

**வரம்புரை:** இந்த உட்பிரிவின்படி வகுத்துரைக்கப்பட்ட தகுதிகள், எதுவும் இந்தச் சட்டம் தொடங்கும் நாளிலோ அல்லது அதற்கு முன்போ நடைமுறையில் இருந்த தகுதிகளுக்கு இணங்க தனியார் பள்ளியில் பணியமர்த்தம் செய்யப்பட்டு பணியில் இருந்து வரும் நபர் எவருக்கும் பொருந்தாது.

(3) சம்பளம் மற்றும் படித்தொகையானது 2009ஆம் ஆண்டு தமிழ்நாடு பள்ளிகள் (கட்டணம் வசூலித்தலை ஒழுங்குமுறைப்படுத்துதல்) சட்டத்தின்படி (தமிழ்நாடு சட்டம் 22/2009) அமைக்கப்பட்ட கட்டணத்தை நிர்ணயம் செய்யும் குழுவிற்கு அத்தகைய பள்ளியால் சமர்ப்பிக்கப்பட்ட பணியாளரின் சம்பளம் மற்றும் பிற படிகள் செலவின விவரவுரையில் உண்மையாகக் காட்டப்படுதல் வேண்டும்.

(4) தனியார் பள்ளி ஒவ்வொன்றின், பணியாளரின் சம்பளம் மற்றும் படிகள் ஒவ்வொரு மாதத்தின் அத்தகைய தேதியன்றோ அல்லது தேதிக்கு முன்போ வகுத்துரைக்கப்படும் முறையில் செலுத்தப்படுதல் வேண்டும்.

(5) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் வரையறைகள் மற்றும் பணி நிபந்தனைகள் தொடர்பாக அதனுடைய பணியாளருடன் ஒப்பந்தம் ஒன்றைச் செய்துகொள்ள வேண்டும்:

**வரம்புரை:** இந்தச் சட்டம் தொடங்கும் தேதியன்று ஏற்கனவே பணியிலுள்ள பணியாளருடன் பணி ஒப்பந்தம் எதனையும் செய்து கொள்ளாமல் இருக்கின்ற போது, அத்தகைய பணி ஒப்பந்தம் இந்தச் சட்டம் தொடங்கும் தேதியிலிருந்து ஆறு மாத காலத்திற்குள் நிறைவேற்றப்படுதல் வேண்டும்.

33. **தனியார் பள்ளிகளில் பணியாளரின் பணியமர்த்தத்திற்கான குறைந்தபட்ச தகுதிகள்.–** நபர் எவரும், பிரிவு 32இல் உட்பிரிவு (2)இன்படி வகுத்துரைக்கப்படும் குறைந்தபட்ச தகுதிகளை கொண்டிருக்காதவர் தனியார் பள்ளி எதிலும் பணியமர்த்தம் செய்யப்படுதல் கூடாது.

34. **தனியார் பள்ளியின் பணியாளர்கள் நடத்தை விதிகளால் நிருவகிப்படுவர்.–** தனியார் பள்ளி ஒன்றின் பணியாளர்கள் ஒவ்வொருவரும் அரசால் உருவாக்கப்படும் நடத்தை விதிகளால் நிர்வகிக்கப்படுதல் வேண்டும்.

35. **அரசு உதவி பெறும் தனியார் பள்ளியின் பணியாளரின் வரையறைகள் மற்றும் பணி நிபந்தனைகள்.–** (1) அரசிடமிருந்து உதவி பெறும் பள்ளி எதனின்

பணியாளரின் பணியமர்த்தம் செய்யும் முறை, நிலை, எண்ணிக்கை, பதவி உயர்வு, சம்பளம், படிகள், விடுப்பு, ஒய்வூதியம், பணிக்கொடை, வருங்கால வைப்புநிதி, காப்பீடு மற்றும் ஒழுங்கு நடவடிக்கை விவரங்கள் உள்ளிட்ட பணி நிபந்தனைகளை அரசு வகுத்துரைக்கலாம்.

(2) தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பின் முன் அனுமதியின்றி கற்பிக்கும் மற்றும் கற்பிக்காத பணியாளரின் ஆளெடுப்பு நடவடிக்கை எதுவும் தொடங்கப்படக் கூடாது.

## அத்தியாயம் VIII
## அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு மானியம் வழங்குதல்.

36. **மானியம் வழங்குதல்.–** (1) அரசு, வகுத்துரைக்கப்படும் நிபந்தனைகளுக்குட்பட்டு, வகுத்துரைக்கப்படும் நோக்கங்களுக்கு இணங்க அத்தகைய விகிதத்தில் 1991–1992ஆம் கல்வி ஆண்டின் தொடக்கத் தேதிக்கு முன்பு அரசிடமிருந்து ஏற்கனவே மானியம் பெற்றுக் கொண்டிருக்கிற தனியார் பள்ளிக்கு தொடர்ந்து மானியம் வழங்கலாம்.

**விளக்கம்:** இந்த உட்பிரிவின் நோக்கத்திற்காக அரசிடமிருந்து மானியம் பெறுகின்ற தனியார் பள்ளி என்பது நிகழ்வுக்கேற்ப வகுப்பு அல்லது பாடப் பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவு எதன் தொடர்பாக மட்டும் அரசிடமிருந்து மானியம் பெறும் தனியார் பள்ளியையும் உள்ளடக்கும்.

(2) அரசு, –

(a) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் அல்லது

பிறப்பிக்கப்பட்ட பணிப்புரைகள் அத்தகைய தனியார் பள்ளிக்குப் பொருத்தமாக இருக்கின்ற அளவுக்கு அத்தகைய வகைமுறைகள், விதிகள் அல்லது பணிப்புரைகள், எதற்கும் இணங்காமல் இருக்கிற; அல்லது

(b) இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகளுக்கு இணங்க அத்தகைய தனியார் பள்ளியில் பணியமர்த்தம் செய்யப்பட்டுள்ள ஆசிரியர் அல்லது பிற நபர் எவருக்கும் செலுத்தத்தக்க சம்பளம் மற்றும் படிகள் அத்தகைய ஆசிரியருக்கு அல்லது பிற நபருக்கு செலுத்தப்படாமலிக்கிற; அல்லது

(c) வகுத்துரைக்கப்படும் நிபந்தனைகள் எதற்கும் முரண்பட்டிருக்கிறது அல்லது இணங்கத் தவறியிருக்கிற,

தனியார் பள்ளி எதனின் தொடர்பாகவும் உட்பிரிவு (1)இல் குறிப்பிடப்பட்டுள்ள மானியம் எதனையும் முழுவதுமாகவோ அல்லது பகுதியாகவோ, நிரந்தரமாகவோ அல்லது குறிப்பிடப்பட்ட காலம் வரைக்கும் நிறுத்தி வைக்கலாம்:

**வரம்புரை:** ஆனால் இந்த உட்பிரிவின்படி மானியம் வழங்குவதை நிறுத்தி வைப்பதற்கான ஆணை ஒன்றைப் பிறப்பிப்பதற்கு முன்பு தகுதியுடைய அதிகாரஅமைப்பு கல்வி முகவாண்மைக்கு அதனுடைய முறையீட்டைச் செய்வதற்கான வாய்ப்பு ஒன்றை வழங்க வேண்டும்.

37. **புதிய தனியார் பள்ளிகள், வகுப்பு அல்லது பாடப்பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவுக்கு மானியம் வழங்குவதற்குத் தடை:–** இந்தச் சட்டத்தில் அல்லது தற்போதைக்குச் நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதிலும் அல்லது தீர்ப்பு அல்லது தீர்ப்பாணை அல்லது நீதிமன்றம் அல்லது பிற அதிகாரஅமைப்பு எதனின் ஆணை எதிலும் அடங்கியுள்ள எது எவ்வாறிருப்பினும்,–

(a) 1991 – 1992ஆம் கல்வியாண்டின் தொடக்கத் தேதியன்றும் அதன் பின்பும் நிறுவப்பட்ட தனியார் பள்ளி எதற்கும் மற்றும் அத்தகைய தனியார் பள்ளியின் வகுப்பு, பாடப்பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவு எதற்கும்;

(b) 1991 – 1992 கல்வி ஆண்டு தொடங்கும் தேதியன்று ஏற்கனவே இருந்து வரும் தனியார் பள்ளி எதுவும் அத்தகைய தொடக்கத் தேதிக்கு உடன்முன்பு அரசால் மானியம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றால்;

(c) 1991 – 1992 கல்வி ஆண்டின் தொடக்கத் தேதியன்று ஏற்கனவே இருந்து வரும் தனியார் பள்ளி ஒன்றில், வகுப்பு அல்லது பாடப் பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவு எதற்கும் அத்தகைய தொடக்க தேதிக்கு உடன் முன்பு அரசால் மானியம் வழங்கப்பட்டிருக்கவில்லை என்றால்; மற்றும்,

(d) அத்தகைய தொடக்கத்தேதியன்று இருக்கும் தனியார் பள்ளி ஒன்றில் 1991 – 1992 வரையிலான கல்வி ஆண்டின் தேதி அல்லது அதற்கு பின்பு வகுப்பு அல்லது பாடப் பிரிவு அல்லது பயிற்று மொழிப் பிரிவு துவங்கப்பட்டுள்ளது என்றால்

மானியம் எதுவும் வழங்கப்படுதல் கூடாது.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக தனியார் பள்ளி என்பதில் சிறுபான்மையினர் பள்ளியும் அடங்கும்.

38. **அரசு நிதி உதவிபெறும் தனியார் பள்ளிகளில் ஆள்குறைப்பின் பேரில் பணியாளரை உட்சேர்த்துக் கொள்ளுதல்.**– கல்வி அல்லது பயிற்றுவிக்கும் பாடப்பிரிவு அல்லது பிற விவரம் எதுவும் தொடர்பாக அரசின் ஆணை எதனின் விளைவாக, அல்லது தனியார் பள்ளி எதிலும் பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை குறைவடைந்ததன் விளைவாக, அத்தகைய தனியார் பள்ளி எதிலும் பணிபுரியும் ஆசிரியர் அல்லது பிற நபர் எவரின் ஆள்குறைப்பின் போதும் அரசால் பேணிவரப்படும் பள்ளி அல்லது தனியார் கல்வி நிலையம் எதிலும் அல்லது அத்தகைய தனியார் பள்ளியில் அத்தகைய ஆசிரியர் அல்லது பிற நபரை பணியமர்த்த, நிகழ்விற்கேற்ப அரசு அல்லது தனியார் பள்ளியின் பள்ளிக் குழுவானது தகுதிவாய்ந்ததாக இருத்தல் வேண்டும்.

**விளக்கம்:** இந்தப் பிரிவின் நோக்கங்களுக்காக அவ்வப்போது அரசால் குறிப்பிடப்படும் நெறிமுறைகளைப் பின்பற்றி அரசு உதவி பெறும் பள்ளியின் பணியாளரின் எண்ணிக்கை நிர்ணயம் செய்யப்படுதல் வேண்டும்.

39. **தகவல் அளிக்காதிருத்தல் அல்லது தவறான தகவலை அளித்தலுக்கான தண்டனை.–** இந்தச் சட்டத்தின் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகள் எதனின் படியும் அதிகார அமைப்பு எதனாலும் கோரப்படும் நபர் எவரும் வேண்டும் என்றே அத்தகைய தகவலை அளிக்கத் தவறுகிறார் என்றால் அல்லது தெரிந்திருந்தும் தவறான தகவலை அளிக்கிறாறென்றால் அவர் பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத்தண்டத்துடன் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

40. **இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதையும் மீறுதலுக்கான தண்டனை.–** (1) பிரிவுகள் 8(7), 20(2), 22(3) மற்றும் 22(4) தவிர இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் எதனையும் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளில் எதனையும் மீறுகின்ற, மீறமுயலுகின்ற அல்லது தெரிந்தே வேண்டுமென்றே மீறும்படித் தூண்டுகிற நபர் எவரும், ஒரு லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்ப்படக்கூடிய பணத்தண்டத்துடன் மற்றும் மீறுதலானது தொடர்ந்து கொண்டிருக்கும் நிகழ்வில் அத்தகைய மீறுதல் தொடரும் ஒவ்வொரு நாளுக்கும் கூடுதலாக பத்தாயிரம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய பணத்தண்டம் விதிக்கப்படுதல் வேண்டும்.

(2) பிரிவுகள் 8(7), 20(2), 22(3) மற்றும் 22(4) இன் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளுக்கு வேண்டுமென்றே இணங்கத் வேண்டுமென்றே தவறுகிற நபர் எவரும், ஓர் ஆண்டுக் காலம் வரை நீட்டிக்கப்படும் சிறை தண்டனை அல்லது ஐந்து லட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய

பணத்தண்டம் அல்லது இரண்டும் சேர்த்து தண்டிக்கப்படுதல் வேண்டும்.

(3) இந்தச் சட்டம் அல்லது அதன்கீழ் செய்யப்பட்ட விதிகள் அல்லது தற்போது நடைமுறையில் உள்ள சட்டம் எதன்படியும் உரிய அதிகார அமைப்பினால் வழங்கப்பட்ட பணிப்பாணை எதனாலும் அல்லது எதன்படியும் அதிகார அமைப்பு, அலுவலர் அல்லது நபர் எவருக்கும் அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பேரில், தனியார் பள்ளி எதிலும் நுழைவதை, வேண்டுமென்றே தடுக்கும் நபர் எவரும், மூன்று மாதங்கள் வரை நீட்டிக்கப்படக்கூடிய காலத்திற்கு சிறை தண்டனை அல்லது ஒரு இலட்சம் ரூபாய் வரை நீட்டிக்கப்படக்கூடிய தண்டத்தொகை அல்லது இவ்விரண்டுடனும் தண்டிக்கப்படுதல் வேண்டும்.

## அத்தியாயம் IX
## மேல்முறையீடு மற்றும் சீராய்வு.

41. **தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் ஆணைகளுக்கு எதிரான மேல்முறையீடு.–** இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதனின் படியும் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினால் பிறப்பிக்கப்பட்ட ஆணை, முடிவு அல்லது பணிப்புரைகள் எதனாலும் பாதிக்கப்பட்ட நபர் எவரும் அத்தகைய ஆணை, முடிவு, அல்லது பணிப்புரைகள் பெறப்பட்ட தேதியிலிருந்து ஒரு மாத காலத்திற்குள் வகுத்துரைக்கப்படும் மேல்முறையீட்டு அதிகார அமைப்பிற்கு மேல்முறையீடு செய்யலாம்.

42. **மேல்முறையீட்டு அதிகார அமைப்பின் அதிகாரங்கள் மற்றும் மேல்முறையீட்டை முடிவு செய்தல்.–** (1) இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் அல்லது

அதன்படி செய்யப்பட்ட விதிகள் எதனின்படியும் வகுத்துரைக்கப்பட்ட தகுதியுடைய அதிகாரஅமைப்பின் ஆணை, முடிவு அல்லது பணிப்புரை எதற்கும் எதிரான மேல் முறையீடு எதுவும் பிரிவு 41இன்படி குறிப்பிடப்பட்ட காலம் முடிவடைந்த பிறகு ஏற்கப்படுதல் கூடாது.

(2) மேல்முறையீட்டாளர் குறித்த காலத்திற்குள் மேல்முறையீடு செய்யாமல் இருந்திருப்பதற்கான காரணம் போதுமானதாக இருக்கின்றது என்று மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு மனநிறைவு கொண்டிருந்தால் அதனுடைய விருப்புரிமையில், பிரிவு 41இன்படி மேல்முறையீடு செய்வதற்காக ஒரு மாத காலத்திற்கு மிகாத கூடுதல் காலத்தை அனுமதிக்கலாம்.

(3) மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு அதனுடைய அதிகாரங்களை செயல்படுத்தும் வரையில் அது அதற்குப் பொருத்தம் எனத் தோன்றுகிற ஆணையைப் பிறப்பிக்கலாம்.

(4) அத்தகைய மேல்முறையீடு பெறப்பட்டதன் பேரில் மேல்முறையீட்டு அதிகாரஅமைப்பு,–

(i) தரப்பினர்களுக்கு அவர்களது தரப்பு முறையீட்டினைச் செய்வதற்கு வாய்ப்பினை அளித்த பின்பு;

(ii) தேவை என்றால், பொருத்தம் எனக் கருதும் விசாரணையைச் செய்து; மற்றும்

(ii) நிகழ்வின் அனைத்து சூழ்நிலைகளையும் கருத்தில் கொண்டு,

மேல்முறையீடு பெறப்பட்ட தேதியிலிருந்து இரண்டு மாத காலத்திற்குள் நியாயமானதாகவும் சமநிலையானதாகவும் அதற்குத் தோன்றுகிற ஆணையை பிறப்பித்தல் வேண்டும்.

43. **சீராய்வு.–** (1) அரசு, தன்னிச்சையாகவோ அல்லது பாதிக்கப்பட்ட நபர் எவரிடமிருந்தும் பெறப்பட்ட விண்ணப்பம் ஒன்றின் பேரிலோ இந்தச், சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் எதனின் தொடர்பாகவும் அதிகார அமைப்பு அல்லது அலுவலர் எவரின் பதிவுருக்களையும் கேட்டுப் பெற்று ஆய்வு செய்யலாம், மற்றும் ஆணைகள் அல்லது எடுக்கப்பட்ட முடிகளில் எதனையும் குறித்து சரியாக இருக்கின்றவா? சட்டப்படியாக இருக்கின்றனவா அல்லது ஆணைக்கான உரிமை உள்ளதா என்று அது மனநிறைவு அடையும் போது அத்தகைய ஆணை அல்லது முடிவு திருத்தம், நீக்கம், மாற்றம் அல்லது மறுபரிசீலனைக்காக திருப்பி அனுப்புதல், அவசியம் என்று அரசு கருதுமானால் அதற்கு இணங்க தக்க உத்தரவுகளை பயன்படுத்தவும் அரசு ஆணைகளை பிறப்பிக்கலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி அவரது தரப்பு முறையீட்டைக் கூறுவதற்கான வாய்ப்பு ஒன்று அளிக்கப்பட்டிருந்தாலன்றி, அத்தகைய நபருக்குக் ஊறுவிளைவிக்கும் வகையில் ஆணை எதுவும் பிறப்பிக்கப்படுதல் கூடாது.

(3) உட்பிரிவு (1)இன்படி முடிவு நிலுவையிலிருக்கும் போது, பொருத்தம் எனத் தோன்றும் பிற ஆணையை அரசு பிறப்பிக்கலாம்.

## அத்தியாயம் x

## கணக்குகள் மற்றும் தணிக்கை.

44. **கணக்குகளின் வருடாந்திர தணிக்கை.–** (1) தனியார் பள்ளி ஒவ்வொன்றும் வகுத்துரைக்கப்படும் கணக்குகளையும் பதிவுருக்களையும் பராமரித்தல் வேண்டும்.

(2) (a) மானியமாக அரசு உதவி பெறும் தனியார் பள்ளி ஒவ்வொன்றின் கணக்குகளும் வகுத்துரைக்கப்படும் அதிகாரஅமைப்பு, அலுவலர் அல்லது நபரால் ஒவ்வொரு நிதியாண்டின் இறுதியிலும் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(b) (a) கூறின்படி வகுத்துரைக்கப்பட்ட அதிகார அமைப்பு, அலுவலர் அல்லது நபர், கணக்குகளின் தணிக்கையின் பேரில் அறிக்கையின் நகல் ஒன்றை தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிற்கு அனுப்ப வேண்டும். அது அதனை தனியார் பள்ளியின் பள்ளிக் குழுவிற்கு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(c) தணிக்கை அல்லது ஆய்வின் விளைவாக வெளியான குறைகள், ஏதேனும் இருந்தால், அதை நீக்கும் வகையில் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பால் குறிப்பிடப்படும் நடவடிக்கையை பள்ளிக்குழு எடுத்தல் வேண்டும், மற்றும் அதனுடைய கருத்துரைகளைச் சேர்த்து அறிக்கை ஒன்றைச் குறிப்பிடப்படும் காலத்திற்குள் தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிற்கு சமர்ப்பித்தல் வேண்டும்.

(3) அரசு உதவி பெறாத தனியார் பள்ளி என்றால் தகுதியுடைய தணிக்கையாளர்களால் ஒவ்வொரு ஆண்டும் குறைந்தபட்சம் ஒரு முறையாவது தணிக்கை செய்யப்படுதல் வேண்டும். அங்கீகாரத்தைப் புதுப்பிப்பதற்கான விண்ணப்பத்தைச் செய்யும் காலத்தில் தணிக்கை அறிக்கையை தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பிற்கு பள்ளி மேலாண்மைக் குழு அனுப்புதல் வேண்டும்.

45. **விவர அறிக்கைகள் முதலியவற்றை அளித்தல்.–** தனியார் பள்ளி ஒவ்வொன்றின் பள்ளிக்குழுவும், இது தொடர்பாக தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினால் குறிப்பிடப்படும் காலத்திற்குள், தகுதிவாய்ந்த அதிகார அமைப்பினால், அவ்வப்போது, கோரப்படும் விவர அறிக்கைகள், புள்ளி விவரங்கள் மற்றும் பிற தகவல்களை தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பிற்கு அளித்தல் வேண்டும்.

## அத்தியாயம் XI
## பல்வகை.

46. **அரசுக்குச் சேரவேண்டிய தொகையை நில வருவாய் நிலுவையைப் போன்று வசூலித்தல்.–** ஏதேனும் திட்டங்களைச் செயல்படுத்தாமல் இருத்தல், மானியங்களை தவறாகப் பயன்படுத்துதல் அல்லது பயன்படுத்தத் தவறுதல் காரணமாக அரசுக்குக் செலுத்தப்பட வேண்டிய தொகையை 1864–ஆம் ஆண்டு தமிழ்நாடு வருவாய் வசூலித்தல் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் II/1864) வகைமுறைகளின்படி நில வருவாய் நிலுவையை வசூலிப்பது போன்று சம்பந்தப்பட்ட நபரிடமிருந்து வசூலிக்கப்படலாம்.

47. **பணிப்புரைகள் வழங்குவதற்கான அரசின் அதிகாரங்கள்**.– அரசு, இந்தச் சட்டத்தின் பிற வகைமுறைகளுக்கு உட்பட்டு, அதற்குப் பொருத்தம் எனத் தோன்றும் விசாரணையை செய்வதற்கு தகுதிவாய்ந்த அதிகார அமைப்பிற்கு பணிப்புரை வழங்கலாம். தகுதி வாய்ந்த அதிகாரஅமைப்பு வகுத்துரைக்கப்படும் காலத்திற்குள் விசாரணையை நடத்த வேண்டும் மற்றும் அரசுக்கு விசாரணையின் முடிவு குறித்து அறிக்கை செய்ய வேண்டும்.

48. **அதிகாரங்களை ஒப்படைவு செய்தல்**.– அரசால் அல்லது அதிகாரஅமைப்பால் குறிப்பிடக்கூடிய அத்தகைய நிபந்தனைகளுக்கு மற்றும் கட்டுப்பாடுகளுக்கு மற்றும் சீராய்வுக்கு உட்பட்டு, பிரிவுகள் 16, 17, 19, 34, 35, 43, 47, 49, 57, 58 மற்றும் 60 ஆகியவற்றால் வழங்கப்பட்ட அதிகாரங்கள் தவிர, இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படியான அதிகாரங்கள் அனைத்தையும் அல்லது எதையும், அலுவலர் எவருக்கும் அல்லது அதிகாரஅமைப்பு எதற்கும், அறிவிக்கையின் மூலம் ஒப்படைவு செய்யலாம் மற்றும் அவ்வாறு ஒப்படைவு செய்யப்பட்ட அதிகாரம் எதனையும் அதே முறையில் திரும்பப் பெறலாம்.

49. **தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் செயற்பணிகளை அரசின் சார்நிலை அலுவலர் அல்லது அதிகாரஅமைப்பு புரிவர்**.– இச்சட்டம் அல்லது அதன்படி செய்யப்பட்ட விதிகளின்படி தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பின் செயற்பணிகளில் எதனையும், அரசுக்கு சார்நிலையிலுள்ள அத்தகைய விவரங்கள் தொடர்பாக மற்றும் அத்தகைய நிபந்தனைகளுக்கு உட்பட்டு அரசு அறிவிக்கையில் குறிப்பிடப்படக்கூடிய

அரசுக்கு சார் நிலையில் உள்ள அலுவலர் அல்லது அதிகாரஅமைப்பால் கூட புரியப்பட வேண்டும் என்று அரசு அறிவிக்கை மூலம் பணிக்கலாம்.

50. **தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு முதலியவை அரசுப் பணியாளர்களாக இருப்பர்**.– அரசால் அதிகாரமளிக்கப்பட்ட தகுதியுடைய அதிகார அமைப்பு ஒவ்வொன்றும் மற்றும் அலுவலர் ஒவ்வொருவரும் இந்தச் சட்டத்தின்படி அதனிடம் அல்லது அவரிடம் விதிக்கப்பட்ட கடமை எதனையும் செய்து முடிப்பதற்காக, இந்தியத் தண்டனைத் தொகுப்புச் சட்டத்தின் (மையச் சட்டம் XLV/1860) பிரிவு 21இன் பொருளின்படி அரசுப் பணியாளராகக் கருதப்படுதல் வேண்டும்.

51. **குற்றங்களை விசாணைக்கு எடுத்துச் கொள்ளுதல்.–** (1) பெருநகர நீதித்துறை நடுவர் அல்லது குற்றவியல் நீதித்துறை நடுவர் நீதிமன்றத்தின் நீதிமன்றம் எதுவும், இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கத்தக்க குற்றம் எதனையும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

(2) இது சம்பந்தமாக அரசால் அதிகாரமளிக்கப்பட்ட அதிகாரஅமைப்பு அல்லது அலுவலர் ஒருவரால் செய்யப்பட்ட அத்தகைய குற்றம் குறித்த பொருண்மைகளின் எழுத்துப்பூர்வமான அறிக்கை ஒன்றின் பேரில் தவிர, இந்தச் சட்டத்தின்படி தண்டிக்கப்படக்கூடிய குற்றம் எதனையும் நீதிமன்றம் எதுவும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுதல் கூடாது.

52. **உரிமையியல் நீதிமன்றங்களின் அதிகார வரம்பிற்குத் தடை**.– இந்தச் சட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ள அதிகார அமைப்பு அல்லது அலுவலர் எவராலும் முடிவு

செய்யவும் கையாளப்படவும் வேண்டிய கேள்வி எதையும் முடிவு செய்வதற்கு அல்லது கையாள்வதற்கும் உரிமையியல் நீதிமன்றம் எதுவும், அதிகார வரம்பைக் கொண்டிருக்காது.

53. **பிற சட்டங்களின் செயல்பாடு**.– பிறவாறு வகைசெய்யப்பட்டிருந்தால் தவிர, இந்தச் சட்டத்தின் வகைமுறைகள் தற்போதைக்குச் நடைமுறையிலுள்ள பிற சட்டம் எதற்கும் கூடுதலாக இருக்குமே அன்றி அதனை குறைவு செய்வதாக இருக்காது.

54.**நல்லெண்ணத்தில் எடுக்கப்பட்ட நடவடிக்கைக்குப் பாதுகாப்பு**.– இந்தச் சட்டத்தின்படி அல்லது அதன்படி செய்யப்பட்ட ஆணைகளின்படி நல்லெண்ணத்தில் செய்யப்பட்ட அல்லது செய்யக் கருதப்பட்ட இந்தச் சட்டத்தினால் அல்லது இந்தச் சட்டத்தின்படியான அதிகாரங்களை செயல்படுத்த அல்லது செயற்பணிகளை செய்து முடிக்கும் அதிகாரமளிக்கப்பட்ட அரசு அல்லது அலுவலர், அதிகாரஅமைப்பு அல்லது நபர் எவருக்கும் எதிராக உரிமைவழக்கு, குற்றவழக்கு அல்லது பிற சட்ட நடவடிக்கைகள் எதுவும் தொடரப்படுதல் கூடாது.

55. **இந்தச் சட்டத்தின்படி வழங்கப்படும் ஆணைகள் முதலியவற்றின் இறுதி நிலை**.– இந்தச் சட்டத்தின் நோக்கங்களுக்காக தீர்மானிக்கப்படும் விவரம் எதனின் தொடர்பாகவும் அதிகார அமைப்பு அல்லது அலுவலர் எவராலும் செய்யப்பட்ட ஆணை, எடுக்கப்பட்ட முடிவு அல்லது பிறப்பிக்கப்பட்ட பணிப்புரை எதுவும், இந்தச் சட்டத்தின்படி வகை செய்யப்பட்ட மேல்முறையீடு அல்லது சீராய்வுக்கு உட்பட்டு இறுதியானதாக இருக்கும்.

56. **கல்வி முகவாண்மை குறித்த பூசல்களுக்கான தீர்வு.–** (1) பிரிவு 52இல் அடங்கியிருக்கும் எது எவ்வாறிருப்பினும், கல்வி முகவாண்மை அமைப்பது குறித்தோ நபரோ அல்லது நபர்களின் குழுமம் எதுவுமோ தனியார் பள்ளி தொடர்பான கல்வி முகவாண்மையாக இருக்கின்றனரா என்பது குறித்தோ பள்ளிக் குழுவை அமைப்பது குறித்தோ அல்லது பள்ளிக்குழுவின் செயலாளரை பணியமர்த்தம் செய்வது குறித்தோ பூசல் எதுவும் எழுகிற போதெல்லாம் அதனை முடிவு செய்ய சம்பந்தப்பட்ட நபர்கள் அல்லது தகுதிவாய்ந்த அதிகாரஅமைப்பு அதனுடைய அதிகார வரம்பைக் கொண்டிருக்கும் உரிமையியல் நீதிமன்றத்தை நாடலாம்.

(2) உட்பிரிவு (1)இன்படி அதற்கு அனுப்பப்பட்ட பூசல் ஒன்று உரிமையியல் நீதிமன்றத்தின் தீர்ப்புக்காக நிலுவையிலிருக்கும் போது அல்லது தனியார் பள்ளியை நடத்துவதற்காக உரிமையியல் நீதிமன்றம் இடைக்கால ஏற்பாடு ஒன்றைச் செய்யும் வரையிலும், தனியார் பள்ளியைப் பொறுத்து, நிகழ்வுக்கேற்ப கல்வி முகவாண்மை, பள்ளிக்குழு அல்லது செயலாளரின் செயற்பணிகளைச் செய்து முடிக்க அரசானது அலுவலர் ஒருவரை நியமனம் செய்யலாம்.

57. **விதிகளைச் செய்வதற்கான அதிகாரம்**:– (1) அரசு, இந்தச் சட்டத்தின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்காக விதிகளைச் செய்யலாம்.

(2) குறிப்பாக மற்றும் முந்தைய அதிகாரங்களின் பொதுதன்மைக்கு ஊறின்றி பின்வரும் விவரங்கள் அனைத்திற்காகவும் அல்லது எதற்காகவும் வகைசெய்யலாம். அதாவது,

(a) விதிகளால் வகுத்துரைக்கப்படும் அல்லது குறிப்பிடப்படும் இந்தச் சட்டத்தினால் வெளிப்படையாகக் கோரப்படும் அல்லது அனுமதிக்கப்படும் விவரங்கள் அனைத்தும்;

(b) இந்தச் சட்டத்தின்படியான விண்ணப்பங்களின் படிவம் மற்றும் அத்தகைய விண்ணப்பங்கள் கொண்டுருக்கப்பட வேண்டிய விவரங்கள்;

(c) தனியார் பள்ளியை நிறுவுதல் மற்றும் பராமரிப்புத்தல்;

(d) தனியார் பள்ளிகளுக்கு வழங்கப்படும் மானியங்கள்;

(e) பிரவு 6இன்படி மானியத்திற்கான அனுமதி;

(f) சமுதாயத்தில் வாழ்க்கைத் தரத்தில் பலவீனமான மற்றும் பின்தங்கிய சமூக மற்றும் கல்வி அடிப்படையில் பிற்படுத்தப்பட்ட வகுப்பினர்களாக இருக்கக் கூடிய குடிமக்கள் மற்றும் பட்டியலில் கண்ட சாதியினர் பட்டியலில் கண்ட பழங்குடியினர் மேம்பாட்டிற்கான சிறப்பு வகைமுறைகள் உள்ளிட்ட தனியார் பள்ளிகளில் நடைபெறும் மாணவர்களின் சேர்க்கை;

**விளக்கம்:** இந்தக் கூறின் நோக்கங்களுக்காக "பட்டியலில் கண்ட சாதியினர்" மற்றும் "பட்டியலில் கண்ட பழங்குடியினர்" என்பது அரசமைப்புச் சட்டத்திலுள்ள அதே பொருளைக் கொண்டிருக்கும்.

(g) தனியார் பள்ளிகளில் கணக்குப் புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் பதிவுருக்கள் பராமரிக்கப்படும் முறை மற்றும் அத்தகைய பராமரிப்பிற்கு பொறுப்புடைய அதிகார அமைப்பு;

(h) தனியார் பள்ளிகளின் கல்வி முகவாண்மைகளால் விவர அறிவிக்கைகள், விவரவுரைகள், அறிவிக்கைகள் மற்றும் கணக்குகளை பணிந்தனுப்பப்படுதல்;

(i) தனியார் பள்ளிகளில் கல்வி மற்றும் கற்பித்தலின் தரநிலைகள் மற்றும் பயிற்றுவிக்கப்படும் பாடப் பிரிவுகள்;

(j) தனியார் பள்ளிகளின் வளாகங்கள் பயன்படுத்தப்படவேண்டிய நோக்கங்கள் மற்றும் வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தப்படும் போதான நிபந்தனைகள்;

(k) பாடப்புத்தகங்கள், வரைபடங்கள், திட்டங்கள், கருவிகள் மற்றும் பிற சோதனைக் கூடம் மற்றும் விளையாட்டுச் சாதனங்களைப் பயன்படுத்துவதற்கான ஒழுங்கு விதி;

(l) தனியார் பள்ளிகளுக்காக மற்றும் தனியார் பள்ளிகள் பெயரிடப்படுதலுக்காக பொது மக்களிடமிருந்து கொடைகள் அல்லது பங்களிப்புகளை ஏற்றுக் கொள்வதற்கான நிபந்தனைகள்;

(m) தனியார் பள்ளிகளுக்கு அளிக்கப்படும் சிறுபான்மை தகுதிநிலை;

(3) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதிகள் மற்றும் பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கைகள் அனைத்தும் தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படுதல் வேண்டும். அவை ஒரு குறிப்பிட்ட நாளன்று நடைமுறைக்கு வரும் என்று சொல்லப்பட்டிருந்தாலன்றி, அவ்வாறு வெளியிடப்பட்ட அந்த நாளன்று நடைமுறைக்கு வருதல் வேண்டும்.

(4) இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட விதி அல்லது பிறப்பிக்கப்பட்ட அறிவிக்கை அது அவ்வாறு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட பின்னர் கூடிய விரைவில் சட்டமன்றப் பேரவைகளின் முன்பு வைக்கப்படுதல் வேண்டும் மற்றும் அது அவ்வாறு வைக்கப்பட்டக் கூட்டத் தொடர் அல்லது அந்தக் கூட்டத் தொடர் முடிவடைவதற்கு முன்னர் அத்தகைய விதி அல்லது அறிவிக்கை ஏதொன்றிலும் மாறுதல் எதையும் சட்டமன்றப் பேரவை செய்யுமானால் அல்லது அந்த விதி அல்லது அறிவிக்கை செய்யப்படுதல் கூடாது அல்லது பிறப்பிக்கப்படுதல் கூடாது என சட்டமன்றப் பேரவை முடிவு செய்யுமானால் அந்த விதி அல்லது அறிவிக்கை அதன் பின்னர் அவ்வாறு மாற்றி அமைக்கப்பட்ட வடிவத்திலேயே நடைமுறைக்கு வருதல் வேண்டும் அல்லது நிகழ்வுக்கேற்ப நடைமுறைக்கு வராது போதல் வேண்டும் எனினும் அத்தகைய மாற்றம் அல்லது நீக்கம் எதுவும் அந்த விதி அல்லது அறிவிக்கை முன்னதாகச் செய்யப்பட்ட செயல் எதனின் செல்லுந்தன்மைக்கும் ஊறின்றி இருத்தல் வேண்டும்.

58. **விலக்கு.–** அரசு, அறிவிக்கையினால் மற்றும் அதில் குறித்துரைக்கப்படும் காரணங்களுக்காக அதற்குப் பொருத்தம் எனக் கருதும் அத்தகைய நிபந்தனைகளுக்குட்பட்டு, இந்தச் சட்டத்தின் அல்லது

அதன்படி செய்யப்பட்ட விதிகளின் வகைமுறைகள் அனைத்தின் அல்லது எதனின் செயல்முறையிலிருந்து தனியார் பள்ளி எதற்கும் விலக்களிக்கலாம் மற்றும் அதே முறையில் மாற்றப்படலாம் அல்லது அத்தகைய விலக்கு நீக்கப்படலாம்.

59. **நீக்கம் மற்றும் காப்புரை.–** (1) (மேற்சொன்ன சட்டமாக இந்தப் பிரிவில் இதன் பின்பு கூறப்பட்டுள்ள) 1973ஆம் ஆண்டு தமிழ்நாடு அங்கீகாரம் பெற்ற தனியார் பள்ளிகள் (ஒழுங்குப்படுத்துதல்) சட்டம் (தமிழ்நாடு சட்டம் 29/1974) இங்கு இதனால் நீக்கம் செய்யப்படுகிறது.

(2) அத்தகைய நீக்கம் எவ்வாறிருந்த போதிலும் மேற்சொன்ன சட்டத்தின்படி செய்யப்பட்ட செயல் அல்லது செயல்முறை எதுவும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்டிருப்பதாகக் கருதப்படுதல் வேண்டும் மற்றும் இந்தச் சட்டத்தின் நேரிணையான வகைமுறைகளின்படி தொடரலாம் அல்லது முடிக்கப்படலாம்.

(3) இந்தச் சட்டத்தில் அடங்கியிருக்கும் எது எவ்வாறிருப்பினும், இந்தச் சட்டத்தின் தொடக்கத்திற்கு முன்பு செய்யப்பட்ட அல்லது பிறப்பிக்கப்பட்ட விதிகள், ஆணைகள், அறிவிக்கைகள், உதவி மானியங்கள், தொகுப்புவிதிகள், பணியமர்த்தங்கள், திட்டங்கள், துணைவிதிகள், ஒழுங்குவிதிகள், அலுவலக குறிப்புகள் சுற்றறிக்கைகள் அனைத்தும் அல்லது பிற ஆணைகள் எதுவும் மற்றும் இந்த இயற்றுச் சட்டத்தில் நிறைவேற்றப்பட்ட விவரங்கள் எதுவும், வகைசெய்யப்பட்ட அல்லது தொடர்புடைய தொடக்கத் தேதியன்று நடைமுறைக்கு வரும் மற்றும் இந்தச் சட்டத்தின்படி செய்யப்பட்ட அல்லது எடுக்கப்பட்ட நடவடிக்கை எதனாலும் இரத்து செய்யப்பட்டிருந்தாலன்றி அல்லது

இரத்து செய்யப்படும்வரை இந்தச் சட்டத்தின் தொடர்புடைய வகைமுறைகளின்படி செய்யப்பட்டிருந்தது போன்று நடைமுறையில் இருப்பதாக மற்றும் செயல்திறமுடையதாக தொடர்ந்து இருத்தல் வேண்டும்.

60. **இடர்ப்பாடுகளை நீக்குவதற்கான அதிகாரம்**.— இந்தச் சட்டத்தின் வகைமுறைகளைச் செயல்படுத்துவதில் இடர்ப்பாடு ஏதேனும் எழுமானால் அரசு, தமிழ்நாடு அரசிதழில் வெளியிடப்படும் ஆணை ஒன்றின் மூலமாக இந்தச் சட்டத்தின் வகைமுறைகளுக்கு முரணாக இல்லாத வகையில் அந்த இடர்ப்பாட்டை நீக்குவதற்கு தேவையானவை என்றோ உகந்தவை என்றோ தனக்குத் தோன்றுகிற அத்தகைய வகை முறைகளைச் செய்யலாம்:

**வரம்புரை:** ஆணை எதுவும் இந்தச் சட்டத்தின் தொடக்கத் தேதியிலிருந்து இரண்டு ஆண்டு காலஅளவு முடிவடைந்த பின்னர் செய்யப்படுதல் கூடாது.